விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 26 ஞாயிற்றுக்கிழமை (11.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 266

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

சீமெந்து

## இனப்பிரச்சினைத் தீர்விற்கு

# தேசிய அரசை அமைக்க விரும்புகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

**இரு பிரதான தேசிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றுபட்டு செயற்பட்டால் மட்டுமே யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவும் முடியும் என தான் நம்புவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல்வழி தீர்வு காண்பதில் தேசிய அரசு தேவைப்படுகிறது. இது தொடர்பாக முன்பு ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசினேன். கடந்த தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னனியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து 73 வீத வாக்குகளைப் பெற்றுள்ளோம் தேசிய அரசு அமைத்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும். அதனையே தான் விரும்புவதாக (12 ஆம் பக்கம் பார்க்க)



## பொலிஸ் காவலரண் மீது நேற்று கைக்குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள பொலிஸ் சோதனைச் சாவடி மீது நேற்று மதியம் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அங்கிருந்த இரு பொலிஸார் படுகாயமடைந்தனர். காயமடைந்த இருவரும் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞன் படையினரால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றை கவச வாகனத்தில் வந்த படையினர் வழிமறித்து அதில் பயணம் செய்த இளைஞன் ஒருவனை கைது செய்துள்ளனர்.

நேற்று இரவு 8.30 மணியளவில் கொழும்பு நோக்கிச் சென்ற மேற்படி பஸ்ஸை வழிமறித்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் அரசாங்கம் உடனடியாக ஈடுபடவேண்டும்

## முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரெரசிட்டா



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக கட்டுப்படுத்திவிட முடியாது என்பதை சர்வதேச சமூகம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரெரசிட்டா ஸ்காஃபர் அம்மையார் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வாஷிங்டனில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கருத்துரைக்கும்போதே ஸ்காஃபர் அம்மையார் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை அமைதிப் பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகளே தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருகின்றனர். விடுதலைப் புலிகளுடன் அரசு நேரடிப் பேச்சுக்களை அவசியம் மேற்கொள்ள வேண்டும். வாய்ப்பேச்சினைவிட்டு களத்தில் அரசு குதிக்கவேண்டும். அதன் மூலம்தான் இனப்பிரச்சினைக்கு கூட நிரந்தரத் தீர்வு காணமுடியும்.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக கட்டுப்படுத்தலாம் என்பது நிகழும் என நம்ப முடியாதது என்பதை (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 3 ம் வாரத்தில்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ல் இருந்து 21 ம் திகதிக்குள் நடைபெறலாம் என எதிர்பார்ப்பதாக தேர்தல் திணைக்களத்தை மேற்கோள்காட்டி ரொய்டர் செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி இத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 21 ற்குள் நடாதப்பட வேண்டும்.

சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக் காலமும் முடிவிற்கு வருவதனால் அடுத்த வாரம் இரு கிழமைகளுக்குள் தேர்தல் திகதி அறிவிக்கப்படக்கூடும்.

வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தல் ஆணையாளரின் சட்டபூர்வ (12 ஆம் பக்கம் பார்க்க)

# மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் அடுத்தவருடம் யுத்த பூமியாக மாறிவிடும்

## சிவாஜிலிங்கம் எம்.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

ஜே.வி.பியிடம் சரணடைந்துள்ள மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் 2006 ஆம் ஆண்டு யுத்த ஆண்டாகத்தான் இருக்கும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் எச்சரித்துள்ளார்.

அவுஸ்ரேலிய இன்பத் தமிழ் ஒலி வானொலிக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். சிங்கள தேசத்துக்கான ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எவ்வித முடிபும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆனால் எமது தமிழீழத் தேசம் அங்கீகரிக்கப்படாத நிலையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கவேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதியன்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆலோசனை நடத்தவுள்ளோம்.

இரு பிரதான அரசியல் கட்சிகளும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுகாண என்ன கொள்கை வைத்திருக்கிறார்கள் என்பதை கேள்வி எழுப்பியிருந்தோம்.

தற்போது சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ பேரினவாதிகளிடம் சரணடைந்துள்ளார். ஜே.வி.பி. விதித்துள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நடவடிக்கைகளைப் பொறுத்தே விடுதலைப் புலிகளின் அடுத்த நகர்வு

(அம்பாறை)

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு தொடர்பாக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பொறுத்தே எமது அடுத்த செயற்பாடுகள் அமையும் என அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகத்தில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அரசியல் பணிக்காகச் சென்ற போராளிகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக அங்கிருந்து திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

எமது போராளிகளின் பாதுகாப்பு உத்தரவாதத்திற்கு அரசு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் விளக்கப்பட்டுள்ளது.

தென்தமிழீழத்தில் தற்போது நிலைமைகள் தொடர்ந்து மோசமடைந்து வருகின்றன. இச் சூழ்நிலை மேலும் மோசமடைவதைத் தடுக்க அரசு விரைந்து செயற்பட வேண்டும். உடன்பாட்டிற்கு அமைய அரசியல் பணியில் ஈடுபட்டு வந்த போராளிகள் தொடர்ச்சியாக படுகொலை செய்யப்பட்டதன் மூலம் சமாதான சூழ்நிலை குழப்பப்பட்டு சமாதான பேச்சுகளுக்கான வாய்ப்பே இல்லாது போய் விட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

SWISS
Mineral Water

Buy Swiss Mineral and win several lakhs worth of prices



Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

# சுயநிர்ணய உரிமையும் சுதுமலைப் பிரகடனமும்



கடந்த மூன்றரை ஆண்டு காலமாக, இரண்டு சிங்கள அரசுகளும் கடைபிடித்து வந்துள்ள சிங்கள பேரினவாத மேலாதிக்கப் போக்கின் காரணமாக, இன்று இலங்கைத் தீவில் நெருக்கடியான நிலைமை ஒன்று உருவாகியுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த் தைகள் செயலிழந்து போயுள்ளதோடு, யுத்த நிறுத்த ஒப்பந்தமும் ஆட்டம் காண்கின்ற நிலைமை தோன்றியுள்ளது. சிங்கள அரசுகள் ஊடாக தமிழீழ



மக்களுக்கு எந்த விதமான நீதியோ, நியாயமோ கிடைக்கப் போவதில்லை என்ற யதார்த்தம் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு விட்ட இக்காலகட்டத்தில் தமிழ் மக்கள் சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் தம்முடைய ஆட்சி முறைமையைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்ற பிரகடனத்தைச் சமர்ப்பித்து இருக்கின்றார்கள்.

இககாலகட்டத்தை தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கியமான காலமாகும். கடந்த கால வரலாற்றுப் பாதையில் நடைபெற்ற சில முக்கிய நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டி, முக்கியமான கருத்துக்கள் சிலவற்றை தர்க்கிபபது தற்சமயம் பொருத்தமாக இருககும்.

## சுதுமலை பிரகடனம்

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1987 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நான்காம் திகதியன்று தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் யாழ்ப்பாணம் சுதுமலையில் முதன்முறையாகப் பகிரங்கக் கூட்டமொன்றில் உரையாற்றினார்.

தமிழீழத் தேசியத் தலைவரைக் காண வேண்டும் என்றும் அவரது உரையைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தில், மிக மிகக்குறுகிய கால அவகாசத்திற்குள் பல லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் சுதுமலையில் கூடி நின்றார்கள். அன்றைய தினம் தமிழீழ தேசியத் தலைவர் ஆற்றிய உரை 'சுதுமலைப் பிரகடனம்' என்று பெயர் பெற்றது.

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு தமிழீழத் தேசியத் தலைவர் கூறிய கருத்துக்களையும் அதனை ஒட்டி பின்னாளில் அவர் ஆற்றிய உரைகளையும், இன்றைய காலகட்டத்தில் நாம் சிந்திக்க வேண்டியது பயனுடையதாகும்.

அன்றைய ஆண்டு அதாவது 1987 ஆம் ஆண்டும் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் அது வேறு இரண்டு அரசுகளுக்கிடையே-அதாவது இந்திய அரசிற்கும்-இலங்கை அரசிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தமாகும். தமிழ் மக்களின் ஒப்புதலோ, அங்கீகாரமோ இல்லாமல், தமிழ் மக்கள் குறித்த அந்த ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதியன்று இந்திய இலங்கை அரசுகளால் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

'சுதுமலைப் பிரகடனம்' என்று பின்னாளில் அழைக்கப்பட்ட அந்த உரையின் போது, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், இலங்கை-இந்திய ஒப்பந்த மானது எமது தேசியப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை பெற்றுத்தராது என்பதைத் தெட்டத் தெளிவாகக் கூறியிருந்தார்.

## இந்திய -இலங்கை ஒப்பந்தம்

'இந்திய இலங்கை ஒப்பந்தம்' அடிப்படையிலேயே பல தவறுகளைக் கொண்டிருந்த ஒப்பந்தமாகும். தமிழ் மக்கள் என்கின்ற ஒரு தேசிய இனத்தின் பிரச்சினையை இந்த 'இந்திய இலங்கை ஒப்பந்தம்' மிகத் தவறாக சித்தரித்திருந்தது. தமிழீழ மக்களின் பிரச்சினை என்பது ஒரு தேசிய இனப் பிரச்சனை என்கின்ற உண்மையை முற்றாக நிராகரித்து விட்டு ஏதோ ஒரு சிறுபான்மை இனக்குழுவின் அரசியல் பிரச்சினை என்ற வகையிலேயே இந்த 'இந்திய-இலங்கை ஒப்பந்தம்' ஒரு தீர்வினைத் தேட முனைந்தது. இந்த-தீர்வு இந்த தீவுக்கு பொருத்தமானது அல்ல!.

ஏனென்றால் இலங்கை மக்கள் ஒரு பல் இனச்சமுதாயமாக அதாவது PLURAL SOCIETY ஆக வாழ்கிறார்கள். இதில் தமிழர்கள் என்பவர் ஓர் இனக்குழு அதாவது ETHNIC GROUP என்பவர்கள் என்கின்ற வகையில் தான் இந்த 'இந்திய இலங்கை ஒப்பந்தம்' எமது ஈழத் தமிழினத்திற்கு ஒரு வரைவிலக்கணத்தை அளித்திருந்தது. இந்த விளக்கமானது தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்தியதோடு மட்டுமல்லாது தமிழ் மக்களின் தேசிய இனக்கோட்பாட்டையும், தேசிய சுயநிர்ணய உரிமையையும் மறுதலித்து நிற்கின்றது. இதற்கு முன்னர் இடம்பெற்ற திம்பு பேச்சுவார்த்தைகளின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வைத்த தமிழ்த் தேசியம்-சுயநிர்ணய உரிமை ஆகிய கோட்பாடுகளுக்கும் இவ் இந்தய இலங்கை ஒப்பந்தம் மூலம் ஆப்பு வைக்கப்பட்டது.

இதனைத்தான் தமிழீழத் தேசியத் தலைவர் அன்றைய தினம் அதாவது பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு குறிப்பிட்டிருந்தார்.

சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டிராத இந்த இந்திய இலங்கை ஒப்பந்தம் எமது மக்களுக்கு நிரந்தர தீர்வைத் தராது என்பதை சரியாக உணரந்து கொண்ட தமிழீழ தேசியத் தலைவர அதனை அன்றைய தினமே தீர்க்க தரிசனமாகத் தெளிவுபடுத்தியிருந்தார்.

'இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் என்று நான் நம்பவில்லை. சிங்கள இனவாத பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கிவிடும் காலம் வெகு தூரத்தில் இல்லை' என்று தீர்க்கதரிசனமாகக கூறிய தேசியத் தலைவர் மேலுமொரு முக்கிய விடயத்தையும் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் சுது மலையில் கூறினார்.

'போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால



எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை.' - இதனைத்தான் அதாவது இதே கருத்தைத்தான் 2002 ஆம் ஆண்டு அன்றைய சிங்கள அரசுடன் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தக் காலத்தின் போதும் தேசியத் தலைவர் கூறியிருந்தார்.

அமைதி வழியில் மென்முறை தழுவி நேர்மையுடனும், நெஞ்சுறுதியுடனும் நாம் எமது போராட்ட இலட்சியத்தை அடைய முனைந்து வருகின்றோம். 'காலத்திற்கு எற்ப வரலாற்றுக் கட்டாயத்துக்கு அமைய எமது போராட்ட வழி முறைகள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை' என்று தமிழீழத் தேசியத் தலைவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கூறியிருந்தார்.

மிகக் குறைபாடான திட்டத்தை பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு அமுலாக்க முயன்ற இந்தியா, அடிப்படையில் இன்னுமொரு முக்கிய விடயத்தை கவனிக்கத் தவறிவிட்டது. சிங்களத்தின் இரண்டு பெரும் அரசியல் கட்சிகளுக்கிடையே இந்த சமாதான ஒப்பந்தம் குறித்து ஓர் ஒப்பந்தத்தை, ஓர உடன்பாட்டை காண்பதற்கு அன்று இந்தியா தவறி விட்டது. அது ஒரு மிகப் பெரிய தவறாகும்.

## சர்வதேசத்தின்நிலைப்பாடு

அதே தவறை இன்று இலங்கை பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ள சம்பந்தப்பட்ட உலக நாடுகளும் செய்திருக்கின்றன. சிங்களத்தின் இரண்டு பெரும் அரசியல் கட்சிகளிடையே சமாதானத் தீர்வு குறித்து, எந்த விதமான உடன்பாட்டையும் அங்கக் கட்சிகளுக்கிடையே ஏற்படுக்காமல் எந்த விதமான உருப்படியான சமாதானத் தீர்வையோ, அல்லது பெறுபேற்றையோ காணமுடியாது. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு எவ்வாறு இந்தியா தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனையைப் புரிந்து கொள்ளவில்லையோ அதேபோன்று இன்று சம்பந்தப்பட்ட உலக நாடுகளும் தமிழீழ மக்களின் தேசிய நாளாந்தப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவில்லை என்ற ஐயப்பாடு எமக்கு உண்டு.



## தலைவரின் செவ்வி

சுதுமலைப் பிரகடனத்தின் பின்பு அதாவது அதற்கு அடுத்த நாள் 05-08-1987 அன்று ஆயுதக் கையளிப்புக் குறித்து, ஊடகவியலாளர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் செவ்வி ஒன்றை அளித்தார். இவர்களில் பெரும்பான்மையானோர் மாறி மாறி ஒரே மாதிரியான கேள்விகளைத் தான் கேட்டார்கள்.

அவை வருமாறு:

முழு ஆயுதங்களையும் கொடுக்கப் போகின்றீர்களா?

ஓர் ஆயுதத்தை கூட வைத்திருக்க மாட்டீர்களா?

எப்போது முழு ஆயுதங்களையும் கொடுத்து முடிப்பீர்கள்?

-இவைதான் மீண்டும் மீண்டும் எழுந்த கேள்விகள்.

தமிழீழ மக்களின் உரிமைகள் குறித்தோ, அவர்களது பாதுகாப்பு குறித்தோ, அவர்களது அரசியல் ரீதியான எதிர்காலம் குறித்தோ இப்பத்திரிகையாளர்கள் ஒரு கேள்வியைக் கூட கேட்கவில்லை. இதே காட்சிதான், இதே நிலைமைதான்- பதினைந்து ஆண்டுகளுக்கு பின்பு அதாவது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 2002 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தாம் திகதியன்று தமிழீழத தேசியத் தலைவர் நடாத்திய சர்வதேச ஊடகவியளாளர் மாநாட்டின் போதும் நிகழ்ந்தது.

ஈழத் தமிழர்கள் இதுவரை காலமும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் பட்ட இன்னல்கள் குறித்தோ, சிறிலங்கா அரசுகள் விதித்திருந்த உணவு மருந்து பொருளாதாரத் தடைகள் காரணமாக ஏற்பட்டிருந்த அவலங்கள் குறித்தோ தமிழ் மக்களுடைய அடிப்படை அத்தியாவசியத் தேவைகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படும் என்பது குறித்தோ இந்த மக்களுக்குரிய புனருத்தாரண புனர்நிர்மாண செயற்பாடுகள் குறித்தோ அவர்களுடைய அடிப்படை உரிமைகள் எவ்வாறு வென்றெடுக்கப்படும என்றோ எந்தவிதமான கேள்விகளையும் இந்த சர்வதேச ஊடகவியலாளர்கள் கேட்கவில்லை.

அவர்கள் மீண்டும் மீண்டும் கேட்ட கேள்விகள்தான் என்ன? தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு விட்டீர்களா? தற்கொலைத தாக்குதல்கள் மீண்டும் நடக்குமா என்பது போன்ற கேள்விகள்தான் மீண்டும் மீண்டும் கேட்கப்பட்டன. இது சர்வதேச சமூகத்தின் அவற்றின் ஊடகங்களின் குறுகிய பார்வையை மீண்டும் நிருபித்ததாகவே அமைந்தது.

இதற்குப் பதிலளித்த தலைவர், பாரம்பரிய பூமியையும், தனித்துவமான மொழியையும், பண்பாட்டையும் கொண்டுள்ள எமது மக்கள் ஒரு தேசிய இனத்தவர்கள் ஆவார்கள். அந்த தேசிய இனத்தவர்கள் தமது அரசியல் பொருளாதார வாழ்வை தாமே தீர்மானிக்கும் உரிமை கொண்டவர்கள என்று கூறினார். இதனையும் சுயநிர்ணய உரிமை குறித்த மேலும் சில விளக்கங்களையும் ஆங்கிலத்தில் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இன்னுமொரு முக்கிய வடயத்தையும் வலியுறுத்தி சொல்லியிருந்தார்.

தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையானது அங்கீகரிக்கப்பட வேண்டும். இச்சுயநிர்ணய உரிமையானது அங்கீகரிக்கப்படாமல் போனால் நாம் பிரிந்து செனறு தனியரசை அமைக்க வேண்டி நேரிடும்.

தமிழீழத் தேசியத் தலைவர் இந்தக் கருத்தை பன்னெடுங் காலமாகவே வலியுறுத்தி வந்துள்ளார். பதினெட்டு ஆண்டுகளுககு முன்பு அவர் சுதுமலையில் பேசிய போது இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு உரிமை எதையும் பெற்றுத் தராது என்றும், இந்த ஒப்பந்தத்தை தாம் ஏற்கவில்லை என்றும் தெரிவித்ததோடு, இன்னுமொரு முக்கியமான கருத்தையும் கூறியிருந்தார். இந்தியாவின் கேந்திரச் செல்வாக்கானது தமிழ் மக்களின் சுயநிரணய போராட்டத்தோடு உரசுகிறது என்றும தேசியத் தலைவர் தெரிவித்திருந்தார்.

தமிழீழத் தேசியத் தலைவர் சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவம் குறித்து தன்னுடைய மாவீரர் தினப் பேருரைகளின் போது பல தடவைகள் பேசியுள்ளார். சர்வதேச ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்ற அதே ஆண்டு மாவீரர் தினப் பேருரையின் போதும் அதாவது 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதியன்றும் தேசியத் தலைவர் சுயநிர்ணய உரிமை குறித்துப் பேசியிருந்தார்.

சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டின் போது சுயநிர்ணய உரிமை குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்தை மீள் உறுதி செய்யும் வகையிலேயே தேசியத் தலைவர் தன்னுடைய 2002 ஆம் ஆண்டு மாவீரர் தினப் பேருரையின் போது சுயநிர்ணய உரிமை பற்றித் தெளிவாக்கியிருந்தார்.

'தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த



பாரம்பரிய மண்ணில் அந்நிய சக்திகளின் தலையீடு ஆதிக்கம் இன்றி சுதந்திரமாக கௌரவமாக வாழ விரும்புகிறார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டை பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது அடையாளத்தை பாதுகாத்து வாழ விரும்புகின்றார்கள். தமது தாயக மண்ணில் தம்மைத்தானே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் வேட்கையாகும். உள்ளான சுயநிர்ணயத்தின் அர்த்தாபிமானம் இதில்தான் அடங்கியுள்ளது. (இது) மறுக்கப்பட்டால் நாம் பிரிந்து சென்று தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.' என்று தலைவர் பேசியிருந்தார்.

## புலம்பெயர் தமிழரின் கடமை

இன்று தமிழீழ மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் பிரகாரம் தமது ஆட்சி இறைமையைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்று சர்வதேச சமூகத்திற்குப் பிரகடனம் ஒன்றைச் சமர்ப்

**இணையப் பார்வை**

பித்துளளார்கள். புலம் பெயர்ந்து சர்வதேசங்களிலும் வியாபித்து வாழ்ந்து வருகின்ற தமிழர்கள தாயக மக்களின் நியாயமான இந்த வேட்கைக்குத் துணை நின்று தோள் கொடுக்க வேண்டும். வெளிநாடுகளில் வாழ்வோர் இக்கோரிக்கைகளுக்கு ஆதரவாக சர்வதேச சமூகத்திற்கு மனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அந்தந்த நாடுகளில் உள்ள பொதுச் சங்கங்கள், மன்றங்கள், கழகங்கள் நிறுவனங்கள், அமைப்புக்கள் யாவும் ஒன்றிணைந்து தமிழழ மக்களின் நியாயமான அரசியல் வேட்கைக்கு ஆதரவாக மனுக்களை அனுப்ப வேண்டும். அந்தந்த நாடுகளில் உள்ள அரசியல் கட்சிகளுக்கும், மனித உரிமை அமைப்புக்களுக்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் இந்த நியாயமான மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதுவே இந்த வேளையில் ஒவ்வொருவரினதும் தார்மீக கடமையுமாகும்.!

□

# யாழ்.இந்து மாணவர் (உ/த) பரீட்சையில் சாதனை



சிவப்பிரகாசம் மயூரன்

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் யாழ் இந்துக கல்லூரி மாணவர்கள் சாதனை புரிந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த மாணவன் சிவப்பிரகாசம் மயூரன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் மூன்று “ஏ” பெற்றதுடன் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளார்.



சாதனைபுரிந்த சிவப்பிரகாசம் மயூரனை எமது நிருபர் செவ்வி கண்டபோது,

மயூரன் 1986/09/30 ஆம் திகதி சாவகச்சேரி அல்லாரையில் சிவப்பிரகாசம், ஜெகதாம்பிகைக்கு மகனாகப் பிறந்தவர். சாவகசசேரி இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக் கலவியைக் கற்று 1996 ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று, யாழ். இந்துக்கல்லூரியில் அனுமதியைப் பெற்றார். க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் பத்து பாடங்களிலும் “ஏ” சித்தியைப் பெற்று க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இச்சாதனை தொடர்பாக மயூரன் தெரிவிக்கையில்,

இச்சாதனையைப் புரிந்ததில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். எனக்கு பாடசாலையில் சகல பாடத்திட்டங்களும் ஆசிரியர்களால் படிப்பித்து முடிக்கப்பட்டது.

மேலதிகமாக விபரங்களைப் பெறுவதற்காகவே தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று கற்றேன். மற்றும் நூலகங்களையும் சில்வேளைகளில் பயன்படுத்திக் கொண்டேன்.

என்னை நன்றாகப் படித்தால் அதிக பெறுபேற்றினைப் பெற்று சாதனை புரியலாம் என ஆசிரியர்கள் கல்விகற்கும் போதே ஊக்குவிப்பு தந்தார்கள். மறுபுறம் வீட்டில் எனது தந்தை நல்ல ஊக்கம் தந்ததோடு நான் முயற்சி எடுத்து படித்ததனாலுமே இச்சாதனையைப் புரியக்கூடியதாக இருந்தது.

மேலும் ஆசிரியர்களதும், பெற்றோர்களதும் ஊக்குவிப்பு எனக்கு கிடைத்ததைப் போன்று ஏனைய மாணவர்களுக்கு கிடைக்கப் பெற்றாலும், மாணவர்கள் அனைவரும் கடின முயற்சி எடுத்து தங்களால் இன்ற ஒரு இலக்கை வைத்து விடா முயற்சியோடு படித்தால் நல்ல பெறுபேற்றைப் பெற முடியும் என்றார்.

மேலும் தான் புலமைப் பரிசில மூலம் வெளிநாட்டிற்குச் சென்று உயர்கல்வியைக் கற்பதற்கு முயற்சி செயது வருவதாகவும கருத்து தெரிவித்தார். இலத்திரனியல, கணனித் துறையில் சிறந்து விளங்குவது எனது இலக்கு என்றார்.

சாதனை புரிந்த மாணவனைப் பற்றி பாடசாலை அதிபர் சிறீகுமரனிடம் கேட்டபோது,

இம் மாணவன் கல்வியில் அதிக அக்கறை காட்டி வந்ததோடு பாடசாலைக்கு ஒழுங்காக வந்து ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்தி வந்த மிகவும் சிறந்த மாணவன் என்றும், இம் மாணவன் தானாகவே தேடிக் கல்வி கற்கின்ற ஆற்றல் உள்ளவன். அத்துடன் சக மாணவர்களுடன் அன்பாகப் பழகி அவர்களுக்குத் தெரியாதவற்றை தெரியப்படுத்திக்கொடுக்கும் பழக்கம் கொண்டவர்.

இம்மாணவன் பாடசாலையில் உள்ள மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் விரும்பப்பட்ட ஒரு மாணவன்.

இம் மாணவன் பாடசாலை மாணவத் தலைவராக இருந்ததோடு ஆண்டு 9 இல் கற்கும் போது அவுஸ்திரேலியா உயர்கல்வி நிறுவனம் நடத்திய பரீட்சையில் தங்கம் வென்றுள்ளார் என்று தெரிவித்தார்.

இதேபோன்று யாழ். இந்துக்கல்லூரியைச் சோந்த மாணவன் பொன்னுத்துரை சிவபாலன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் மூன்று “ஏ” பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

சாதனை நிகழ்த்திய சிவபாலனை செவ்வி கண்டபோது,

சிவபாலன் காரைநகர் களபூமியைச் சொந்த இடமாகக்கொண்டவர். இவர் 1991ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து பின்னர் கிளிநொச்சிக்கு சென்று கிளிநொச்சி புனித திரேசா பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 146 புள்ளிகளைப் பெற்று யாழ். இந்துக்கல்லூரியில் கல்வி கற்க நுழைந்தார்.

## நல்ல வழிகாட்டலும் விடாமுயற்சியும் வெற்றிக்கு வழிவகுக்கும்.

க.பொ.த சாதாரண தர பரீட்சையில் பத்து “ஏ” பெற்று க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் கற்று மூன்று “ஏ” சித்தியைப பெற்று இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார்.



பொன்னுத்துரை சிவபாலன்

இச்சாதனை தொடர்பாக சிவபாலனிடம் கேட்டபோது,

நான் உயிரியல் பாடத்தில் மூன்று “ஏ” சித்தியினைப் பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்க வேண்டும் என்ற ஒரு இலக்கோடு கல்வி கற்றேன். அது எனக்கு கிடைத்துள்ளது. அதை நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

எனக்கு பாடசாலையில் சகல பாடத்திட்டங்களும், படிப்பித்து முடிக்கப்பட்டதோடு பாடசாலையில் ஆசிரியர்களால் மேலதிக வகுப்புகளும் நடத்தப்பட்டது.

மேலதிக பயிற்சிகளைப் பெறுவதற்காக தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று கல்வி கற்றதோடு படிப்பதற்கு இரவிலும் அதிகாலையிலும் அதிக நேரத்தை ஒதுக்கி படித்ததாலுமே இச்சாதனையை புரியமுடிந்துள்ளது.

அத்துடன் கடந்தகால வினாத்தாள் புத்தகங்களை எடுத்துப் படித்ததோடு பாடங்களை மிகவும் ஆர்வமாக சிந்தனை செய்து கற்றேன்.

பௌதிகவியலில் செய்முறை செய்யும் போது சிறுகுறிப்பு எடுத்து படித்ததோடு நூலகங்களிற்கு சென்று உயிரியல் சம்பந்தமான புத்தகங்களை எடுத்துப் படித்து குறிப்பிட்ட நேரத்தில் கட்டுரை வினாக்களுக்கு விடை எழுதப் பழகிக்கொண்டேன்.

செவ்வி
ஞா.ஐங்கரன்

அத்துடன் ஆசிரியர்கள் தரும் கடினமான கேள்விகளுக்கு எல்லாம் நான் விடை கண்டு பிடிக்க வேண்டும், பாடசாலையில் நடாத்தப்படும் தவணைப் பரீசை களில் அதிக புள்ளிகளைப் பெறவேண்டும் என்ற ஒரு குறிக்கோள் என்னிடம் காணப்பட்டது. இவைகளே எனது சாதனைக்கு காரணமாக அமைந்தது.

நான் உயர் படிப்பை புலமைப்பரிசில் மூலம் வெளிநாட்டிற்கு சென்று கற்பதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறேன்.

நான் வெளிநாட்டிற்கு சென்று மேற்படிப்பினை படித்து முடித் தாலும் சந்தர்ப்பம் கிடைத்தால் எனது சொந்த இடமான காரைநகரில் சேவையாற்ற ஆர்வமாக இருக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

(தொடரும்....)

# யாழ். மாவட்டப் பாடசாலைகளின் முன்னணி (உ/த) பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் யாழ். மாவட்ட பாடசாலைகள் பெற்ற முன்னணிப் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

### யாழ்.மத்திய கல்லூரி

**உயிரியல்**

என்.பிரதீபன் - 3ஏ

**கணிதம்**

எஸ்.மயூரன் - 2ஏ, பி
எஸ்.தயாகரன் - 2பி, சி
ரி.விதூஷன் - பி, 2சி
எஸ்.கோகுலன் - பி, 2சி
எஸ்.அனோஜன் - பி, 2சி

**வர்த்தகம்**

கே.கஜேந்திரன் - 2ஏ,பி
எஸ்.வர்ணன் - ஏ, 2பி
எஸ்.கமேசன் - ஏ, 2பி
என்.சர்மிலன் - ஏ, 2பி
கே.தர்மகுமார் - 3பி
ஏ.அரிகரன் - 2பி, சி
எஸ்.உமேஸ் - பி, 2சி
எஸ். யானுபன் - பி, 2சி

**கலை**

ரி.கென்றி, பிரஷாத்- 3ஏ
ரி.நிஷாந்தன் - 2ஏ, பி
எஸ்.திலக் - 2ஏ, பி
ரி.சுதாகரன் - ஏ, 2பி
ரி.அறிவழகன் - ஏ, 2பி
எஸ்.சுரேந்திரன் - ஏ, 2பி

### யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்

**கலைப்பிரிவு**

செல்லத்துரை மயூட்சன் - 3ஏ
சி.தனுஷா - 2ஏ, பி
செ.கஜேந்தினி - ஏ, 2பி
வி.அர்ச்சனா - ஏ, 2பி
வி.நிதர்சினி - ஏ, 2பி
சி.அனுஷியா - ஏ, 2பி
ஜெ.ஹர்சினி - ஏ, பி, சி
நா.அஜந்தா - ஏ, பி, சி
சி.மேகிலா - ஏ, பி, சி
செ.துஷ்யந்தி - ஏ, பி, சி
தே.சுபேந்தினி - ஏ, பி, சி
அ.கௌசிகா - ஏ, பி, சி

**கணதப்பிரிவு**

மா.கஜானன் - பி, 2சி

**வர்த்தகப்பிரிவு**

க.பிரதீபன் - 2ஏ, பி
செ.செல்வதுஷி - 2ஏ, பி
வை.விஜிதரன் - 2ஏ, பி
ஜெ.ராஜிவ்காந் - 2ஏ, சி
ப.சசிகரன் - ஏ, 2பி
த.அர்ச்சுதானந்தன் - ஏ, பி, சி
வி.சந்தியப்பிரசன்னா - ஏ, பி, சி

### மானிப்பாய் மகளிர் கல்லூரி

**வர்த்தகப் பிரிவு**

சி.றாதிகா - 3ஏ

**கலைப்பிரிவு**

ர.கஜேந்தினி - 2ஏ, பி
வ.சுஜித்தா - 2ஏ, சி
த.பவித்திரா - ஏ, பி, சி
ப.ஜனனி - ஏ, பி, சி

(ற)

## பதவியுயர்வு

கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி உததியோகத்தராகப் பளை கிராம அபிவிருத்தி உததியோகத்தர் திருமதி நவமணி ஜெயராஜா கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக களததினால் பதவி உயர்த்தபபட்டு நியமிக்கப் பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி உததியோகத்தராக கடமையாற்றிய திருமதி எஸ்சிவராசா அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (ற-52)

# பப்புவா நியூகினியாவில் கடும் நிலநடுக்கம்

(சிட்னி)

பசுபிக் கடலின் தென் பகுதியல் உள்ள தீவான பப்புவா நியூகினியாவில் நேற்று முன்தினம் மதியம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது 7.3 எனப் பதிவாகியிருந்தது. இதனால் சுனாமி ஆபத்து ஏற்பட வாய்ப்பு இல்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நியூகினியாவின் ரபவுல் நகரிலுள்ள ஜரிமா அட்லிஸ் என்ற பெண் ஓட்டல் தொழிலாளி இது பற்றி கூறுகையில்,

இங்குள்ள மக்கள் நிலநடுக்கத்தை உணர்ந்தனர். யாரும் பயப்படவில்லை. இது ஒரு சாதாரண அதிர்வுதான். இதனால் யாருக்கும் எந்தக் காயமும் ஏற்படவில்லை. நகரில் எந்தச் சேதமும் இல்லை. மிகப்பெரியதாக ஒன்றும் இல்லை. கடந்த 1994ஆம் ஆண்டு இங்கு எரிமலை வெடித்து இதேபோல் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அருகிலுள்ள பல பகுதிகள் பயங்கரமாக சேதமடைந்தன. இதைச் சரிசெய்ய நீண்ட நாட்கள் பிடித்தது என்றார்.

ஜப்பானில் நிலநடுக்கத்தை கண்டறியும் துறையில் பணிபுரியும் அதிகாரி ஷின்ஜிரோ தாரி இதுகுறித்து கூறுகையில்,

இந்த நிலநடுக்கத்தினால் சுனாமி பீதி ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை. ஏனெனில் பூகம்பம மையம் கொண்டுள்ள இடம் மிகவும் ஆழமாக இருக்கிறது என்றார். (ற)

# இந்திய- இலங்கை உளவுப் பரிமாற்றத்திற்கு விசேட கடல்வழி கேபிள் தொடர்புகள்!

(கொழும்பு)

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில தற்போது உளவுத்தகவல் பரிமாற்றத்தில் இருக்கும் முறைமையானது மாற்றியமைக்கபபட்டு கேபள் வழியிலான தொடர்புகள் மூலம தொடர்பாடல்களைத் தனித்து வைத்திருப்பதற்கான இரகசியத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கடலுக்கு ஊடாக இணைக்கப்படும் கேபிள் வழியிலான தொடர்புகள் மூலம் இந்தத் தொடர்பாடல்கள் இனி மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இந்தக் கேபிள் மூலமான தொடர்புகளைச் சீர்செய்வதற்கும் தீவிரமாகக் கண்காணிப்பதற்கும் விசேட கடற்படைக் கலங்கள் செயற்பட இருககின்றன.

கேபிள் வழியிலான தொடர்புகளைப் பயனபடுத்தி நீர் மூழ்கிக் கப்பல்களின் உதவியுடன் ஒட்டுக்கேட்காதவாறு விசேட கண்காணிப்புக்களும் மேற்கொள்ளப்பட இருப்பதாகச் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## சுற்றுலா விடுதியில் தீ

(கொழும்பு)

ஹிக்கடுவையில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை 4.00 மணியளவில் திடீரென தீப்பற்றிக்கொண்டதாகக் ஹிக்கடுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தீவிபத்துக் காரணமாக விடுதியின ஒரு பகுதி முற்றாகச் சேதமாகி இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தீவிபத்துக்கான காரணமோ அல்லது சேத விபரங்களோ இதுவரை கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-2)

# இன்று ஒரு தகவல்

## ஆசைகள்

இந்த உலகத்திலுள்ள எல்லா உயிரினங்களுக்குமே ஆசைகள உண்டு. இவற்றுள் மனிதனுக்குத்தான் ஆசைகள் அதிகம். மனிதனைத் தவிர்ந்த மற்றைய உயிரினங்கள் உணவு வகைகளுக்கும தம் இனப்பெருக்கச் செயற்பாடுகளுக்குமே ஆசைப்படுவதாகப் பலர் அவதானித்துள்ளார்ர்கள்.

மனிதர்களுக்கு ஆறறிவு இருப்பதினால் ஆசைகளும் அதிகமாக இருக்கின்றது. இங்கே அதிகம் என்று சொல்வது ஆயிரத்துக்கு மேல் என்பதுதான் அர்த்தம். ஒவ்வொரு மனிதர்களையும் தனித்தனியே தம் ஆசைகள் எவையெவையெனக் கேட்டுப் பார்த்தால் ஒருநாள் முழுவதுமே சொல்லிக் கொண்டிருப்பார்கள். எனது நண்பர் ஒருவர் வெளிநாட்டிலிருக்கின்றார். அவர் தனது பிள்ளைகளின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு கேக் வெட்டுவதற்காக பவுணில் கத்திசெய்து வைத்திருக்கின்றார். எப்படியிருக்கிறது இவரின் ஆசை? இதேபோல ஆசைகள் பலவிதம்.

இதெல்லாவற்றையும் ஒருபுறத்தில் வைத்துவிட்டு பொதுவாக மனிதர்களுக்குள்ள முக்கியமான ஆசைகள் எவை என்று கேட்டால் முதலில் வரும் பதில் என்ன? பணக்காரனாக வேண்டும் என்பதுதான். பணம் மனித வாழ்விற்கு முக்கியம்தான். ஆனால் இதை அதிக தொகையாக சேமித்து வைத்திருந்தாலும் மனித மனம் திருப்தியடையப் போவதில்லை. பணம்தான் மனித ஆசைகள வளர்வதற்கு தூண்டுகோலாகவுமுள்ளது.

ஒருவரிடம் உள்ள பணத்தைப் பொறுத்தே மண்ணாசையும் பொன்னாசையும் தோன்றுகின்றன. பணமில்லாதவர்களிடத்தில் இவ்வாசைகள தோன்றித்தான் என்னாவது?

இதைவிட பெண்ணாசை என்பது ஆணினத்திற் சிலரை மிருகத்தனமாக மாற்றிவிடுவதையும் காணக்கூடியதாக உள்ளது. இன்னும் சொன்னால் பதவியாசை,புகழாசை என்பனவும் ஆண்,பெண் வேறுபாடின்றி கற்றோரையும் மற்றோரையும் பெரும்பாடுபடுத்துவதை இன்றைய சமுதாயத்தில் நாம் பார்க்கின்றோம்.

இதற்கெல்லாம் விதிவிலக்காக எனது ஊரிலே ஒருவர் இருந்தார்.அவரொரு பிரமச்சாரி, ஆடம்பரம் எதுவும் கிடையாது. மிகவும் சுத்தமாகத்தான் இருப்பார். நேரத்தையே பொன்னாக மதிப்பவர். புத்தகங்களை வாசிப்பதே அவரின் பொழுதுபோக்கு. இடையிடையே தியானத்தில் இருப்பார். கோயில்களுக்குச் செல்ல மாட்டார். யாரேனும் “நீங்கள் ஒரு பக்திமான் போலிருக்கிறீர்களே கோயில்களுக்கு ஏன் செல்வதில்லை? ”என்று கேட்டால் “எனக்குக் கோயில் என்பது எனது இதயம்தான்.அங்கேதான் இறைவன் இருக்கிறார்”என்று சொல்லி புன்னகை புரிவார்.

இவர் பிறவியிலிருந்தே மாமிசம் சாப்பிடாதபடியால் இவரைச் சைவம் என்றே ஊரவர்கள் அழைப்பார்கள். இவர் பல்வேறு வகையான உணவுகளுக்கும் ஆசைப்படமாட்டார். உயிர் வாழ்வதற்காகவே கிடைப்பதை அளவாகவே சாப்பிடுவார்.

தன்னூரிலுள்ள மக்களின் சிறுசிறு பிரச்சினைகளை இவரிடம் சொன்னால் அதற்கு இலகுவான தீர்வுபெற வழி சொல்லிக் கொடுப்பார். இத்துடன், இவரின் சேவை நின்று விடவில்லை. தன்னிடம் வருவோருக்கெல்லாம் பற்பல அறிவுரைகளையும் கூறிக்கொள்வார்.

இதனால் இவரிடம் எனக்கு நல்ல விருப்பம். எனது ஓய்வுநேரங்களில் இவருடன் கதைப்பதற்காகச் செல்வது வழக்கம்.

ஒருநாள் ஆசைகள் பற்றிய கதை வந்துவிட்டது. அப்போது அவர் சொன்னார் “இவ்வுலக ஆசைகளின் முடிவு துன்பங்கள் தான். உண்மையான இன்பம்பெற வேண்டுமாயின் கடவுளிடம் ஆசைவைக்க வேண்டும். ஆகவே பேரின்பமாக மாறி மறுவுலக சொர்கக வாழ்விற்கு வழிகாட்டும்” என்றார்.

“தன்னை அணுகியோருக்கு அருள்புரியும் ஆண்டவரிடம் ஆசை வைப்பவர்கள் இவ்வுலக வாழ்வில் பொய் சொல்லக் கூடாது. பிறர் பொருள்களுக்கு ஆசைப்படலாகாது. பிறருக்குத் துன்பம் விளைவித்தலை முற்றாகத் தவிர்க்க வேண்டும். எல்லா உயிர்களிடமும் அன்பாக இருத்தல் அவசியமானது. தினமும் ஆண்டவரைத் தியானித்து அவர் பின் நாமும் சென்றால் சொர்க்கபுரியான பரலோகத்திற்குச் சென்றுவிடலாம்”என்று சொன்னவர் ஒரு கணம் கண்களை மூடி ஆண்டவரைத் தியானித்துவிட்டு மீண்டார். அப்போது அவர் முகத்தில் சந்தோஷம் நிரம்பி வழிந்தது.

இதைப் பார்த்த என் மனம் பரவசமடைந்தது. ஆண்டவரை அடைவதறகு முயற்சிசெய்ய வேண்டுமென்ற ஆசை பொங்கியது. இதன்பின் சைவம் சொல்லியது போல் நடக்கலானேன். வருடங்கள் பல கடந்த பின் எறும்புகளைக் கூட மிதித்தல் பாவம் என்ற நிலைக்கு வந்துவிட்டேன்.

இப்போது சைவத்திற்கு எணபது வயதிற்கு மேல்வரும்.அன்றொரு நாள் திடீரென ஊரில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அதிகமானோர் சைவத்தின் வீட்டுப் பக்கமாக ஓட்டமும் நடையுமாகச் சென்றார்கள். நானும் அவர்களின் பின் நடந்தேன்.

அங்கே சைவம் கால்களை நீட்டியபடி கைகளை கும்பிடுவது போல கூப்பியவாறு மலர்ந்த முகத்துடன் ஆடாமல் அசையாமல் படுத்திருந்தார்.என்ன நடந்தது என்று நினைக்கிறீர்கள்? அவர் சொர்க்கத்துக்குப் போய்விட்டார்.

எந்த உயிரென்றாலும் பிரிவின் போது ஒருவித அவஸ்தை இருககிறதலலவா இதையே மரண அவஸ்தையென்று சொல்லுவார்கள். அதனால்தான் உயிர் பிரியும் போது உடல் உறுப்புக்களை அசைத்து வேதனைப்படுவதை நாம் காண்கின்றோம்.

சைவத்திற்கு இந்த மரண வேதனை வரவேயில்லை. சொர்க்கததிறகுப் போகிறவர்களுக்கு மரண அவஸ்தை இல்லையென்று அங்கே நின்றவர்களிற் பலர் சொல்லிக் கெண்டார்கள். இதைப் பார்த்தவர்களுக்கு சொர்க்கத்தின் ஆசையும் வரும்தானே.

**எஸ்.எஸ்.காசிப்பிள்ளை**

# மஹிந்த - ஜே.வி.பி ஒப்பந்தம்

## வரலாற்றுச் சிறப்புமிக்கது

### மங்கள புகழாரம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவும் ஜே.வி.பியும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக மேற்கொண்ட ஒப்பந்தம் வரலாற்றுச் சிறப்பமிக்கது என்று அமைச்சர் மங்கள சமரவீர புகழாரம் சூட்டியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் ஒருங்கிணைப்பாளராக இருக்கும் மங்கள சமரவீர நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டை யுத்தப் பாதைக்கு அழைத்துச் செல்லக் கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் தான் மஹிந்த ராஜபக்ஷ முடிவுகளை மேற்கொண்டுள்ளார்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பது எப்படி என்பதில இன்னமும் தெளிவான நிலை எவரும் மேற்கொள்ளவில்லை. ஆனால், தொடர்புடைய அனைத்துக் குழுக்களுடனும் பேசி சுமுகத் தீர்வை மேற்கொள்ள ராஜபக்ஷ முடிவுசெய்துள்ளார்.

அமைதி முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு அங்குலம் அடி எடுத்து வைத்தால் ஒரு மைல் தூரம் மஹிந்த அதிகப்படியாகவே நகர்வுகளை மேற்கொள்வார் என்றார். (ற)

## சமாதானத்திற்கான சாவுமணி

### -மனோ கணேசன

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷவும் ஜே.வி.பியினரும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தமானது சமாதான நடவடிக்கைகளுக்கு அடிக்கப்பட்ட சாவுமணி என கண்டிததுள்ள மேல்மாகாண மக்கள் முன்னணியின தலைவர் மனோ கணேசன் இந்த ஒப்பந்தத்தின் விளைவுகளை மஹிந்த ராஜபக்ஷவும் நாட்டு மக்களும் மிக விரைவில் அனுபவிப்பார்கள் எனவும் எச்சரித்துள்ளார்.

தனித் தமிழீழத்திற்கு மாற்றாக சமஷடி அமைப்பின் கீழ் வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் முழுமையான சுயாட்சி என்பதுதான் தமிழ் தரப்பின் குறைந்த பட்ச நிலைப்பாடாக இருக்க முடியும். ஒற்றையாட்சி முறையானது தந்தை செல்வா காலத்துடன் முடிந்து போன விடயமாகும். இன்று மீண்டும் ஒற்றையாட்சி பற்றி பேசிக்கொண்டிருப்பது முட்டாள்தனமும், கேலிக் கூத்தும் ஆகும்.

இன்று இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் சமஷடி என்ற நிலைப்பாட்டில் தமிழர்கள் மாத்திரமல்ல ஐக்கிய தேசியக் கட்சி,முஸ்லிம் கட்சிகள், சிங்கள முற்போக்குக் கட்சிகள் ஆகியவையும் ஏற்றுக்கொண்டுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான சுதந்திரக் கட்சிப்பிரிவு உட்பட பொதுஜன ஐக்கிய முன்னணியில் இடம்பெறும் கம்யூனிஸ்ட் சமசமாஜக் கட்சிகளும் சமஷடி நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளன இவை எல்லாவற்றுக்கும் மேலாக சர்வதேச சமூகமும் இனப் பரச்சினைக்கு சமஷடி முறையிலான தீர்வையே வலியுறுத்தி வருகின்றன .

இந்நிலையில் ,இன்று சமஷடி அமைப்பை தவிர்த்து ஒற்றையாட்சி முறையை வலியுறுத்துவதன் மூலமாக ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் மஹிந்த ராஜபக்ஷவை வரலாற்றின் பின் நோக்கிய நிலைக்கே அழைத்துச் செல்லமுற்படுகின்றன.

இந்த இரண்டு கட்சிகளும் சமஷடியை நிராகரிப்பதுடன போர் நிறுத்த ஒப்பந்தம்,பொதுக்கட்டமைப்பு,இடைக்கால நிர்வாகம்,வட கிழக்கு தமிழர் தாயகம் ஆகிய அனைததையும் நிராகரிக்கின்றன. இவை பேரினவாத நிலைப்பாடாகும்.

தமிழர்களை தனியான நாடு ஒன்றை அமைத்துக் கொள்ளும் நிலையினை நோக்கியே இந்தப் பேரினவாத நிலைப்பாடுகள் தள்ளுகின்றன. அதேபோல் இலங்கை தேசிய இனப்பிரச்சனைக்கு சமஷ்டித் தீர்வைத் தருவதற்கும் சிங்களத் தலைமைகள் தயாரில்லை என்ற நிலைப்பாடு சர்வதேச சமூகத்தை தனித் தமிழழத்தை அங்ககரிக்கும நிலைக்கே கொண்டு செல்லும் எனவும் மனோகணேசன் தெரிவித்துள்ளார். .(ற)

## ஜே.வி.பியின் ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த மாறியுள்ளதாக ஐ.தே.க கிண்டல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாள மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின் ஜனாதிபதி வேட்பாளராக மாறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் தேர்தல் விஞ்ஞாபனமே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதும் தேர்தல் விஞ்ஞாபனமாக வுளளது. இதிலிருந்து பிரதமருக்கு கொள்கை எதுவும் இல்லை என்று வெளிப்பட்டிருக்கின்றது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகவும் நாட்டின் பொருளாதாரம் குறித்தும் ஜே.வி.பியினருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் இது தெளிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 54ஆவது வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றுகையில், யுத்தநிறுத்த ஒப்பந்தமானது ரணில் விககிரமசிங்கவினால் மேற்கொளளப்பட்ட சிறந்த நடவடிக்கையாகும் என்று பாராட்டியிருந்தார். ஜனாதிபதியின் இக்கருத்து மூலம சமாதானத்தின் பால் உள்ள தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனால், பிரதமர் ஜே.வி.பி.யினருடனான ஒப்பந்ததின் மூலம் சமாதானம் கைநழுவிப் போய்விடுமென மக்கள் அஞ்சுகினறனர்.

பிரதமர் செல்லும் பாதையினை நோக்குமிடத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் ரணிலுக்கு தனது ஆதரவினை வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

## பங்களாதேஷ்-இலங்கை இடையே இராணுவத் தொடர்பு பலப்படுத்தப்படும்

### பங்களாதேஷ் விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் விமானப்படைத் தளபதி ஏயார்வைஸ் மார்ஷல் அஸாம் கடந்த புதன் கிழமை பல இடங்களுக்கும் விஜயம் மேற்கொண்டார்.

ஐந்துநாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொணடு இவர் கடந்த 4ஆம் திகதி இலங்கை வந்தார். கடந்த புதன்கிழமை அநுராதபுரத்துக்கு விஜயம் செய்த பங்களாதேஷ் விமானப்படைத்தளபதி முதலில் பல்லேகல சீனிவாசக தேரரைச் சந்தித்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீஜெயஸ்ரீ மகாபோதியை தரிசித்த அவர் விசேட சமய நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டார்.

கண்டிக்குச் சென்ற பங்களாதேஷ் விமானப்படைத் தளபதி தலதா மாளிகைக்குச் சென்று சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டார். பங்களாதேஷக்கும் இலங்கைக்குமிடையே இராணுவத் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பங்களாதேஷ் விமானப்படைத்தளபதி தெரிவித்துள்ளார். (ற-8)

## அமெரிக்க சூறாவளியின் தாக்கம்; உலக சந்தையில் எரிபொருள் விலையுயர்வு

அமெரிக்காவின் கச்சா எண்ணெய் இருப்பு குறைந்துளளதை அடுத்து, ஆசியச் சந்தையிலும் அமெரிக்காவன் நியூயோர்க் சந்தையிலும் பெற்றோலிய, கச்சா எண்ணெயின் விலை உயர்ந்துள்ளது.

அமெரிக்காவை சூறாவளி தாக்கியதை அடுத்து, பாதிக்கப்பட்ட மாநிலங்களில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் உற்பத்தி பாதிக்கப்பட்டுளளது. அதனால், தனது அவசரகால இருப்பில்ருந்து 64 இலட்சம் பீப்பாய் கச்சா எண்ணெயை அமெரிக்க விசைத்துறை விடுவித்தது. அதனால், அதன் அவசரகால இருப்பு அளவு 31 கோடியே 50இலட்சம்பீப்பாய்களாகக் குறைந்துள்ளது.

அமெரிக்க பெற்றோல் இருப்பும் 43இலட்சம் பீப்பாய்கள் குறைந்து, 19 கோடியே ஒரு இலட்சம் பீப்பாயகளாக உள்ளது.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மாநிலங்களில் உள்ள எணணெய் சுத்திகரிப்பு ஆலைகள், முழு அளவிலான உற்பத்தியை எப்போது மீண்டும் தொடங்கும் என்பது தெரியாததாலும், கச்சா எண்ணெய் சந்தையில் விலைகள உயர்ந்து வருகின்றன.

நியூயோர்க் சந்தையில், 64.49 டொலர்களாக (ஒரு டொலர் மதிப்பு சுமார் ரூ.45) இருந்த ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின விலை, (இந்திய நேரம், வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில்) 64.93 டொலர்களாக அதிகரித்துள்ளது. இது ரூ. 19.80 உயர்வாகும்.

கச்சா எண்ணெய் விநியோகம் அதிகரிக்காததால், இந்த உயர்வு ஆசியச் சந்தையிலும் எதிரொலிக்கின்றது.(ற)

# சீக்கியர்களிடம் மன்னிப்புக் கோரும் இந்தியா தமிழீழத்திடம் எப்போது மன்னிப்புக் கேட்கும்?

② (தொடர்ச்சி...)

## கோட்சேயின் மறுபிறவி

இந்திய இராணுவ சிப்பாய்கள'ன் வெறிக்கு இந்தியத் தலைவா களின் படங்கள கூடத் தப்பவில்லை. நெடியகாடு என்னும் பகுதியில் கணபதி படிப்பகம் ஒன்று உள்ளது. அதில் ஐந்து அடி உயரமான மகாத்மா காந்தியின் உருவப்படம் தொங்க விடப்பட்டு இருந்தது. இந்திய சிப்பாய்கள் அந்தப் படிப்பகத்தின் கதவை உடைத்து உள்ளே புகுந்து தங்கள் தேசத் தந்தையின் படத்தையும் உடைத்து எரித்துவிட் டுச சென்றாாகள். காந்தி அடிகளின் எரிந்து கிடந்த அலங்கோலமான படத்தை நானும் பாாத்தேன். காந்தியைச் சுட்ட கோட்சே மறுபிறவி எடுத்து வந்து காந்தியின் படத்தைக்கூட விட்டுவைக்கவில்லை.

அதைப் போல வர்ணகுலசிங்கம் அரசரத்தினம் என்னும் ஒரு வணிகன'ன் பெரிய வ'டு ஒன்றும் நாசப்படுத்தப்பட்டு இருந்ததைை நான் பார்த்தேன். அவர் ஓர் இந்திய பக்தர். இந்தியத் தூதுவராக இருந்த த'ட்சித்தின் நெருங்கிய நண்பா. தமிழ்ழ மக்களின் பிரச்சினைகளை இந்தியாவினால்தான் தர்க்க முடியும் என்று உறுத'யாக நம்பியவர்.

1987 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர்தம் மனைவி பத்மலோசினி, தம் 5 பெண் குழந்தைகளுட [illegible] தனியாக இருநது குடும்பத்தை [illegible]டியோ சிரமப்பட்டு நடத்திக் கொ[illegible]ருந்தா[illegible]. [illegible] பெரிய வட்டில் வர[illegible]பறையில் இந்திரா காந்தியின் ஆளுயர மூவர்ணப்படம் தொங்கவிடப்பட்டு இருந்தது. அந்த வட்டிற்குள் புகுந்த இந்திய இராணுவத்தினர் அதைப் பார்த்துக்கூடத் தங்கள் கொடுஞ்செயலை நிறுத்தவில்லை. வட்டையே கொளுத்திவிட்டுச் சென்றாாகள்.

வித்தனை ஒழுங்கை என்னும் தெருவில் ஒரு வட்டின் கதவை உடைத்து உள்ளே புகுந்து கண்டபடி சுட்டு 8 பேரைப் படுகொலை செய்து, ஏராளமானவர்களைப் படுகாயப்படுத்தி விட்டுச் சென்றார்கள். இறந்தவர்களின் சடலங்கள் மற்றும் காயம் அடைந்தவாகளுக்கு நடுவே மற்றவாகள் அந்தநாள் முழுவதும் அப்படியே பதுங்கி இருக்க வேண்டியிருந்தது. வல்வெட்டித்துறை கிராமிய வங்கி முற்றிலுமாக எரிந்து சாம்பல் மேடாகிக் கிடந்தது. எந்தத் தெருவுக்கு நான் சென்றபோதிலும் அந்தந்த தெருக்களில் இந்திய இராணுவம் இழைத்த அட்டூழியங்களைப் பற்றியும், படுகொலைகளைப் பற்றியும் கண்ணர்க் கதைகளை. மக்கள் கூறினார்கள்.

வல்வெட்டித்துறையில் மட்டுமில்லாமல் அங்கிருந்து இரண்டு கிலோ மற்றர் தொலைவில் உள்ள ஊரணி, பொலிகண்டி ஆகிய இடங்களிலும் இந்திய இராணுவத்தினர் வன்முறை வெறியாட்டம் நடத்தினார்கள். ஊரணி அரசு மருத்துவமனையில் நூற்றுக்கணக்கான மக்கள் அடைக்கலம புகுந்திருந்தார்கள். இந்திய இராணுவம் அந்த மருத்துவமனையைச் சுற்றி வளைத்துக்கொண்டு யாரையும் வெளியே செல்லவிடவில்லை. அதே நேரத்தில் வ'டுகளில் இருந்தும் கோயில்களில் இருந்தும் பலர் இராணுவத்தினரால் இழுத்து வரப்பட்டு மருத்துவமனைக்கு முன்னால் உள்ள தார்ச் சாலையில் உட்கார வைக்கப்பட்டு இருந்தனர். மருத்துவமனைக்கு உள்ளே இருந்தவாகள் வெளியில் உட்கார வைக்கப்பட்டவர்களின் கதி என்ன ஆகுமோ என்ற அச்சத்தில் இருந்தார்கள். நண்ட நேரத்திற்குப் பிறகு அணைவரும் முகாமுக்குக் கொண்டு போகபபட்டனர்.

வல்வெட்டித்துறைச் சந்தையில் இருந்து 100 மற்றர் தெற்கே தெணிய அம்பை என்ற இடத்தில் பல வடுகள் எரிக்கபபட்டு அந்தத் தீ மேலும் பரவிக் கொண்டே இருந்தது.

இராணுவத்தினர் போய்விட்டதாக நினைத்து அங்கிருந்த மக்கள் தண்ண'ரை ஊற்றி அணைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். வல்லை மக்கள் குழுவின் செயலாளர் ஆனந்தராஜாவும் அங்கு சென்று தயை அணைககும் முயற்சியில் ஒத்துழைத்தார். அப்போது உடுப்பிட்டியில் இருந்து இந்திய இராணுவச் சிப்பாய்கள் 30 பேர் திடீர் என அங்கு வந்து சோந்தனா். தயை அணைக்க முயற்சி செய்து கொண்டிருந்த ஆனந்தராஜாவை அவர்கள் பார்த்துவ'ட்டார்கள். அவருடன் சோந்து மேலும் 8 பேரைப் பிடித்துக் கைதிகளாகத் தங்களுடன் இழுத்துச சென்றார்கள். அப்போது கப்டன் பர்க் என்னும் இந்திய அதிகாரி அங்கு வந்தார். அவர் ஏற்கெனவே ஆனந்தராஜாவிற்கு நன்கு அறிமுகமானவர். எனவே அவரிடம் ஏதோ முறையிடுவதற்காக ஆனந்தராஜா முயன்றபோது தன்னிடம் இருந்த துப்பாக்கியை அவர் மார்புக்கு நேரே தூககிப் பிடித்தார். ஆனந்தராஜா பாடசாலை ஒன்றின் முதல்வர், மக்கள் குழுவின் செயலாளர், இந்திய இராணுவத்திற்கும் மக்களுக்கும் இடையே பாலமாக இருந்து செயல்பட்டவர். ஒரு முறை பருத்தித்துறை இந்திய இராணுவ முகாமைச் சோந்த சிப்பாய் ஒருவனைப் புலிகள் கைது செய்து கொண்டுபோய் விட்டார்கள். அவரை மட்பதற்கு வடமராட்சி முழுவதும் இராணுவத்தினர் சல்லடை போட்டுத் தேடினார்கள். ஆனாலும், அவாகளால் சிப்பாயை மட்க முடியவில்லை. அந்த நேரத்தில் இந்திய அதிகாரி ஆனந்தராஜாவிடம் மன்றாடினார். புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளரான தப்ன் என்பவருடன தொடர்புகொண்டு அந்தச் சிப்பாயை விடுவிககச் செய்து இந்திய இராணுவ அதிகாரிகளிடம் ஆனந்தராஜாவும் மக்களும ஒப்படைத்தார்கள்.

இப்படியெல்லாம் செய்த ஆனந்தராஜா வையே அவர்கள் துச்சமாக மதித்தார்கள். ஆனந்தராஜாவையும், அவருடன் கைது செய்யப்பட்ட மற்றவர்களையும் அழைத்துச் சென்று உடுப்பிட்டி இராணுவ முகாமில் மிருகத்தனமாகத் தாக்கினார்கள். நான்கு சக்கிய சிப்பாய்கள் ஆனந்தராஜாவைச் சுற்றிக்கொண்டு உருளைக் கட்டைகளால் மாறி மாறித் தாக்கினார்களா. அவா தலையில் இருந்து குருதி ஓடியது. முகத்தில் ஆழமான காயங்கள் ஏற்பட்டன. க'ழே விழுந்த அவர் தொண்டையின் ம'து ஒரு மரக்கட்டையை வைத்துச் சக்கிய சிப்பாய் ஒருவன் அதன் ம'து ஏறி ந'ன்றான். தான் இறக்கப்போவதை உணர்ந்துவிட்ட நேரத்தில் அவர் அவனைப் பிடித்துத் தள்ளியதும் ஆத்திரம் கொண்ட அந்தச் சிப்பாய் அவர் முகத்தில் மாறி மாறி மிதித்தான். அவா மூச்சு திணறி மயங்கிவிட்டார். அவர் இறந்துவிட்டதாகக் கருதி அந்த வெறியர்கள் விலகிச் சென்றார்கள். சிறிது நேரத்தில அங்கு வந்த இராணுவ டாக்டர் கப்டன் சௌத்ரி ஆனந்தராஜாவை ஏற்கெனவே அறிந்தவர். அதனால் அவரை மருத்து

**பழ.நெடுமாறன்**

வமனைக்குக் கொண்டு சென்று தக்க சிகிச்சை செய்து அவா உயிரைக் காபபாற்றினார்.

மறுநாள் காலை மருத்துவமனையில படுத்திருந்த ஆனந்தராஜாவை டாக்டர் கப்டன் சௌத்ரி உடல்நிலை விசாரிப்பதுபோல வந்தார். தலையிலே பட்ட காயத்திற்கு மருந்து போடப்பட்டிருந்தது. முகம் வங்கி இருந்தது. வலது கன்னத்தில் ஆழமான காயம் இருந்ததால் எழுந்த'ருக்க முடியவில்லை. படுத்திருந்தார். டாக்டருடன் வந்த கப்டன் கர்பத்சிங் என னும் சக்கியன் அவரின் தலைமயிரைப் பிடித்துத் தூக்கி நிமிர்த்தினான். பின்பு இந்தியில் ஏதோ திட்டினான். போரில் இரண்டு பக்கமும் இழப்புகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததுதான், ஆனால், போரில் எந்தச் சம்பந்தமும் இல்லாத பொது மக்களிடம் ந'ங்கள் நடந்து கொண்ட முறை காட்டுமிராண்டித்தனமானது, கொடூரமானது என ஆனந்தராஜா பதில் கூறினார். அதைக் கேட்ட டாக்டரின் முகம் கோபத்தினால் சிவந்தது.

'புலிகளின் ஆயுதக் கிடங்குகள் இருக்கும இடத்தை ந'ங்கள் காட்டிக் கொடுததால் உங்கள் உயிரைக் காப்பாற்றும்படி மேலதிகாரிகளுக்கு நான் சிபாரிசு செயவேன். ந'ங்களும் குடும்பஸ்தர், பள்ளியின் முதல்வராக இருப்பவர், எதற்காக வ'ணாக உயிரை இழக'க வேண்டும்' என்றார்.

அவரது வார்த்தைகளைக் கேட்டதும் ஆனந்தராஜா அந்த வேதனையின் நடுவிலும் சிரித்துக்கொண்டே 'டாக்டர் நான் கடவுளை பிராாத்திக்கப் போகிறேன'. இவ்வாறு கூறியதும் டாக்டர் சௌத்ரி வேகமாக விலகிச் சென்றார். அவர் போய்ச் சேர்ந்த சில நிமிடங்களில் பிரிகேடியர் சங்கர் பிரசாத், கர்னல் அவுஜியா, கர்னல் சர்மா ஆகியோர் ஜப்பில் வந்து சேர்ந்தனர். நேராக ஆனந்தராஜா படுத்திருந்த கட்டிலை நோக்கி வந்தார்கள. அவரைப் பாாத்ததும் ஆச்சரியப்படுபவா போல் பிரிகேடியர் நடந்தார்.

'என்ன மிஸ்டர் ஆனந்தராஜா என்ன நடந்தது. உங்களை எதற்காக இங்கு கொண்டு வந்தார்கள்' என்று கேட்டார். என்னை ஏன் கொண்டுவந்தார்கள என்பது எனக்கே தெரியாது. என்னுடைய கோலத்தைப் பாருங்கள் என்று கூறிக் குருதியில் தோய்ந்து உலர்ந்து இருநத தனது சட்டை, வேட்டி, குருதி ஓடி உறைந்து போயிருந்த தலை எல்லாவற்றையும் பிரிகேடியருக்குக் காட்டினார். 'மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாடுதானா உங்கள் நாடு? சே! என்னால் நம்பவே முடியவிலலை'. என்று வேதனையோடு ஆனந்தராஜா கூறியபோது அந்தப் பிரிகேடியர் பின்வரும் பதிலைச் சொன்னார்.

'மிஸ்டர் ஆனந்தராஜா, வெரி சாரி, உங்களைத் தற்செயலாகத்தான் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறாாகள். அதற்காக மனம் வருந்துகிறேன். உங்களுடைய சொல்லைப் புலிகள் கேட்கமாட்டார்கள். எப்படியாவது அவர்களை நாங்கள் அழித்துவிடுவோம். அதற்கு உங்களைப் போன்ற படித்தவர்கள் தான் உதவி செய்யவேண்டும். புலிகள் ஒளிந்திருக்கும் இடங்களை ந'ங்கள் கூறினால் உங்களைப் பத்திரமாக இந்தியாவுக்கே அனுப்பி அங்கே ந'ங்களும் உங்கள் குடும்பமும் நிம்மதியாக வாழ்வதற்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்கிறோம். ந'ங்கள் பயப்படத் தேவையில்லை. உங்கள் முகத்தை மறைத்து முகமூடி போட்டு அழைத்துச் செல்கிறோம். எங்களுடைய ஜப்பில் வந்தே புலிகளின் மறைவிடங்களைக் காட்டிக் கொடுக்கலாம்' என்றார்.

### இணையப் பார்வை

பிரிகேடியரின் இந்தக் கோமாளித்தனமான வார்த்தைகளைக் கேட்டு ஆனந்தராஜா எரிச்சலுடன் பதில் கூறினார்.

'அத்தகைய துரோகத்தை நான் ஒரு போதும் செய்ய மாட்டேன். புலிகளை அழிக்க நினைப்பதை மறந்துவிட்டு அவர்களுடன் பேசிப் பிரச்சினைகளைத் தர்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அதுதான் உங்களுக்கும் உங்கள் நாட்டிற்கும் நல்லது. அதை விட்டுவிட்டுச் சிறு பையன்களிடம கூறுவது போல என்னிடம் கூறாதர்கள்' என்று கூறிவிட்டு அவர் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டார்.

பிரிகேடியர் அருகே நின்ற கர்னல் சர்மா 'நாங்கள் சொன்னபடி செய்யாவிட்டால் உம்மை காங்கேசன்துறை முகாமுக்கு அனுப்பிவிடுவோம்' என்று மிரட்டினார்.

(தொடரும்...)

# நெல் கொள்வனவில் அதிகளவு ஈடுபாடு

(கொழும்பு)

ஏற்கனவே 13ஆயிரம் மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் 9 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மூலமும் எஞ்சியுள்ள பகுதி விவசாய சங்கங்கள் மூலமும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட செயலாளர்கள் மேலதிக விதைகளை கோரி அனுப்பிய விண்ணப்பங்களைத் தொடர்ந்து நெல் கௌள்வனவிற்கென்று அகதிகரித்த நிதியை ஒதுக்கீடு செய்வது என்று திரைசேரி தீர்மானித்துள்ளது.

நெல்கொள்வனவுக்கென்று ஏற்கனவே 54 கோடி ரூபா மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவின் பணிப்புரைகளைத் தொடர்ந்து நெல கொள்வனவு நடவடிக்கைகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. (த-9)

# மீள்குடியமர்வை வலியுறுத்தி வலி. மக்கள் க.கா.குழுவில் முறைப்பாடு

(திருநெல்வேலி)

வலிகாமம் பகுதி மக்கள் தம்மைத் தமது சொந்த இடங்களில மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் தனித்தனியான முறைபபாடுகளைப் பதிவு செய்யத் தொடங்கியுள்ளனர்.

நேற்று மட்டும் 500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் தனித்தனியாக முறைப்பாடு செய்ய ஆயத்தமாகிவருவதாகவும் தெரியவருகிறது.

(ரு-43)

# தலை வெட்டப்பட்ட நிலையில் இளைஞரின் சடலம் மீட்பு

(கொழும்பு)

தரணியகல பகுதியில் நீர்த் தேக்கத்தின் அருகிலிருந்து கடந்த வியழாக்கிழமை இனந்தெரியாத நபர் ஒருவரின் சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் தலை வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டதாக தரணியகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் சுமார் 25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவருடையதாக இருக்கலாம் என்றும் தெரிவிககப்பட்டுள்ளது. சடலம் கயிற்றால் கட்டப்பட்ட நிலையில் மீட்டகப்பட்டுள்ளது. அந்தப் பிரதேச மக்கள் கொடுத்த தகவல்களையடுத்தே பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட நபர் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் அல்ல என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக தரணியகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ரு-8)

# கிழக்கு மாகாணத்தில் 6000 ஊனமுற்ற சிறார்

கிழக்கு மாகாணத்தில் 6000 ஊனமுற்ற சிறுவர்கள் வாழ்ந்து வருவதாக வடகிழக்கு மாகாண சமூகநலப்பணிப்பாளர் றஞ்சினி நடேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

கடந்த கால யுத்தம், இயற்கை அனர்த்தம், பிறப்பின் குறைபாடுகள் போன்றவையே சிறுவர்களை ஊனமாக்கியுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் 6 பிரதேசங்களில் 1324 சிறுவர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 2005 சிறுவர்களும், அம்பாறை மாவட்டத்தில் 13 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 2080 சிறுவர்களும் ஊனமுற்றிருக்கின்றனர்.

அரச சார்பற்ற நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளின் படி இவ் விபரங்கள் தெரியவந்திருப்பதாகவும் பணிப்பாளர் மேலும தெரிவித்துள்ளார். (ரு-8)

# ஒரு கல்லூரியின் கதை



## திரை விமர்சனம்

உயிர் காப்பான் தோழன் என்பதை கல்லூரி மாணவர்களின் நட்பை வைத்து சொல்லும் கதை.

அந்தக் கல்லூரி மாணவர்களுக்காக எதையும் செய்பவன் சத்யா. கல்லூரி படிப்பு முடிந்து 5 ஆண்டுகளுக்குப் பிறகு எல்லோரும் சந்திக்க முடிவு செய்கிறார்கள். அந்த நாளும் வருகிறது. எல்லோரும் வருகிறார்கள. பலத்த எதிர்பார்ப்புகளுக்கிடையே சத்யாவை அவனது தந்தை அழைத்து வருகிறார். அவனைப் பார்த்த கல்லூரி நண்பர்கள் அதிர்ச்சி அடைகிறார்கள். அவன் எதையும் அறிந்துகொள்ள முடியாத நடைப் பிணமாக இருக்கிறான்.

சத்யாவை பரிசோதித்த டாக்டர், அவன் ஜோதி என்ற மாணவியை காதலித்து இருக்கிறான். அது வெற்றி பெறாததால் ஏற்பட்ட பாதிப்பால் இப்படி மாறிவிட்டான். 5 ஆண்டுகளுக்கு முன்பு கல்லூரியில் படித்த அதே சூழ்நிலையில் சத்யா இருந்தால் குணம் அடைய வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிறார்.

நண்பன் சத்யாவுக்காக அவனுடன் படித்த எல்லோரும் சொந்த வேலைகளை விட்டு விட்டு ஒரு மாதம் கல்லூரி மாணவர்கள் ஆகிறார்கள். திருமணம் நிச்சயம் செய்யப்பட்ட ஜோதியையும் கல்லூரி மாணவி ஆக்குகிறார்கள். அவளையே சத்யா சுற்றி வருகிறான். சத்யா குணம் அடையலாம் என்ற நிலையில் ஜோதி கல்லூரியை விட்டுப் போய் விடுகிறாள்.

அவன் குணம் அடைந்தானா?... சத்யா- ஜோதி காதல் என்ன ஆனது? என்பது கிளைமாக்ஸ்.



சத்யாவாக ஆரியா, அமைதியாக வந்து ஆர்ப்பாட்டம் செய்கிறார். யதார்த்தத்தை விட சினிமாத்தனம் அதிகமாக இருக்கிறது என்றாலும, கிடைத்த வாய்ப்பை அனுபவித்துசெய்திருக்கிறார். பொலிஸ் அதிகாரியிடம் மோதும்போது புயல், காதலால் உருகும்போது தென்றல, நண்பர்களுக்காக துடிக்கும்போது... அனல். என்று நடிப்பை பிரித்துக் காட்டியிருக்கிறர்.

காதலி ஜோதியாக சோனியா அகர்வால். காதல் அனுபவ முத்திரையை அப்டியே உருக வைக்கிறார். அவரது சூழ்நிலையை நியாயப்படுத்தி வெற்றி பெற்றிருக்கிறார். இன்னும் கொஞ்சம் வாய்ப்பு கொடுத்திருக்கலாம்.


சாருஹாசன், ஜெய்வர்மா, சகி, சந்தானம், ஆனந்தசாமி, மவுலி, சார்லி, தலைவாசல் விஜய் அனைவரும் கல்லூரியின் தூணாகவும், செங்கற்களாகவும் பயன்பட்டிருக்கிறார்கள்.

கல்லூரி படிப்பு முடிந்து 5 வருடங்களுக்குப் பிறகு அதே சூழ்நிலையை உருவாக்க் முடியுமா? எல்லோரையும் ஒன்று சேர்க்க முடியுமா? என்பது கேள்விக்குறியான விஷயம். என்றாலும் ... அப்படி நடந்தால் எப்படி இருக்கும் என்று சிந்தித்திருக்கிறார்கள். வித்தியாசமான கற்பனை.

நிஜங்களைத் தள்ளி வைத்துவிட்டு சினிமாவாக பார்த்தால் புதிய முயற்சி. கதை - திரைக்கதை - வசனம் - இயக்கம்- நந்தா பெரியசாமி. 'கிளைமாக்ஸ்' எதிர்பாராதது 'தாங்ஸ்' என்ற வார்த்தைக்குப் புது அர்த்தம் சொல்கிறார்.


யுவன் சங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் படத்துக்குப் பலம். பின்னணி இசை மிரட்டல். ஆர்.மதியின் கமரா 'பளிச்' இன்னும் கொஞ்சம் விறுவிறுப்பு ஏற்றியிருக்கலாம்.

இந்தக் கல்லூரியின் கதை... காதலையும் நட்பையும் காவியமாக்கும் முயற்சி.



'அ... ஆ...'
நிலா - எஸ்.ஜே.சூர்யா

# இளம் நடிகர்கள் பார்வையில் ரஜினிகாந்த்



இன்றைய இளம கதாநாயகர்கள் விஜய், சூர்யா, சிம்பு, விக்ரம், ஆர்யா, பரத், ஸ்ரீகாந்த் ஆகியோரை ரஜினிகாந்த் ஒவ்வொரு வகையில் கவர்ந்துள்ளார்.

நடிகர் விஜய், "ரஜினி சாரிடம் எனக்குப் பிடித்தது தொழிலில அவர் காட்டும் சின்ஸி யாரிட்டிதான். சூப்பர் ஸ்டாரான அவர் 'நான் சிவப்பு மனிதன்' பட ஷூட்டிங்கிற்கு ஒருநாள் அரை மணிநேரம் லேட்டாக வந்ததற்கு அப்படத்தின் இயக்குனரான என் அப்பாவிடம் பலமுறை ஸாரி கேட்டிருக்கிறார். இந்த சின்ஸியாரிட்டிதான் அவரிடம் நான் கற்றுக்கொண்ட பாடம் என்று சொல்கிறார்.



நடிகர் சூர்யாவுக்கு ரஜினியிடம் பிடித்தது அவரது எளிமை. "கையில பத்து ரூபா அதிகமா வந்தாலே தலைகால் புரியாதவர்களை நாம தினமும் பார்க்கிறோம். இவ்வளவு புகழ், செல்வாக்கு, பணம் இருந்தாலும் ரஜினிசார் சிம்பிளா இருக்கார் பாருங்க. அவர்கிட்ட அதான் எனக்கு ரொம்ப பிடிச்சது" என்கிறார்.



"ரஜினிசார் ஜெயிக்கப் பிறந்தவர். அவர் நடிக்கவெல்லாம் தேவையில்லை. சும்மா ஸ்கிரீன்ல வந்து நின்னாப் போதும். தியேட்டரே கலங்கும்" என்று அதிசயிக்கிறார் சிம்பு.

"பிறவி ரஜினி ரசிகன் நான். என் இரண்டு வயசிலேயே ரஜினிசார் மாதிரி ஸ்டைலா தலை கோதிக்காட்டி கிளாப்ஸ் வாங்குவேன்" என்கிறார் பரத்.

"ரஜினிசாரோட நின்னு ஒரு போட்டோ எடுத்திட்டாலே எனக்கு அது பெரிய சந்தோஷம் தான்" என்று மனம் நெகிழ்கிறார் ஸ்ரீகாந்த்.

"காலேஜ் பங்ஷன்ல 'ஆட்டோக் காரன்... ஆட்டோக்காரன்" பாட்டுக்கு ஆடித்தான் காலேஜ் வட்டத்தில் ஹீரோவானேன்" என்று தெரிவிக்கிறார் ஆர்யா.

"சக நடிகர்கள், கலைஞர்களுக்கு அவர் தரும் அங்கீகாரம், காட்டும் அக்கறைதான் ரஜினியிடம் எனக்குப் பிடித்தது. என் ஒவ்வொரு படத்தையும் பார்த்துட்டு போன் பண்ணி பாராட்டுவார். சிலசமயம் டிப்ஸ்கூட தருவார்" என்று புகழ்கிறார் விக்ரம் . ரஜினிகாந்த் நட்சத்திரங்களுக்கும் நட்சத்திரமாகத்தான் இருக்கிறார்.



'மது'
ஜானவி -ரமேஷ்

வயசுப்பசங்க நாயகி பாரதி கதாநாயகியாகத்தான் நடிப்பேன் என்று கொஞ்ச நாள் பிடிவாதமாக இருந்தார். இப்போது வேறு வழியில்லாமல் வெற்றிவேல் அண்டு சக்திவேல் படத்தில் சத்யராஜ் மகளாகவும், சிபிராஜ் தங்கையாகவும் நடிக்கிறார்.

* * *

கஜினி படத்தில் அசின் சொந்தக்குரலில் பேசுகிறார்.

* * *

அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கும் படம் ஒன்றை குஷ்பு தயாரிக்கிறார். இதன் இயக்குனர் சின்னா பட வசனகர்த்தா சுராஜ்

* * *

புதுப்பேட்டை படத்தில் கஸ்தூரி ராஜா வில்லனாக நடிக்கிறார்.

### ஜெயம் ரவி - த்ரிஷா நடிக்கும்

# சம்திங்... சம்திங்... உனக்கும் எனக்கும்

விக்ரம் நடித்த 'தில்' விஜய் நடித்த 'யூத்' உட்பட பல படங்களைத் தயாரித்த டி. ராமாராவ் வழங்கும் ஸ்ரீ லக்ஷ்மி புரொடக்ஷன்ஸ் நிறுவனமும், ஜெயம் ரவி நடித்த எம்.குமரன் சன் ஒஃப் மகாலட்சுமி படத்தைத் தயாரித்த எடிட்டர் ஏ.மோகன் வழங்



கும் ஜெயம் கம்பெனி நி
மான முறையில் தயாரி
சம்திங் உனக்கு எனக்
இதில் ஜெயம் ரவி, த்
கின்றனர். மற்றும் சந்தா
சச்சு உட்பட பலர் நடிக்கின்ற
ஜெயம், எம்.குமரன் சன் ஒ
படங்களை இயக்கிய
எம்.ராஜா இந்தப் படத்தின் திரைக்கதை எழுதி இயக்கு
வருகிற ஏப்ரல் தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் தி
படத்துக்கு ஏ.வெங்கடஷே ஒளிப்பதிவு செய்கிறார். தே
அமைக்கிறார்.



# மீண்டும் அவத...



மீண்டும் பழைய அவதாரம் எடுக்க பாரதிராஜா முடிவு செய்திருக்கிறார்.

இதுபற்றி சொன்ன அவர் 'என் படங்கள் சமீப காலத்தில் தோற்றுப் போய் விட்டன. அதற்குக் காரணம் எனது கார் ஏ.சி வசதிகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற பொருளாதார பாதுகாப்பு சிந்தனை தான்.

இனி அப்படி இருக்க மாட்டேன். மீண்டும் பழைய பாரதிராஜா வருவான் ஜெயிப்பான்...' என்றார் உணர்ச்சி வசப்பட்டு.

# பூஜா ...



பூஜா மாத
பிரசாந் துடன் '
படங்களில் நடித்
தமிழ் மார்க்
ளூரில் இருந்து
அண்ணா நகரில்
கிறார்.

படப்பிடிப்புக்குப் போனால் நடிப்பில் முழுமையாக மூழ்கி
காக எதையும் செய்வேன்.

புது கெட் - அப்பில் நடிக்க என்னை மாற்றிக்கொ
இருக்கிறேன். தமிழ்ப் பட உலகில் நல்ல நடிகையாக நி
எனது இலட்சியம். இதற்காக வேகமாக தமிழ் கற்று வருகி

## ... த்ரிஷா நடிக்கும் ... உனக்கும் எனக்கும்



விஜய் நடித்த 'யூத்' உட்பட
...த்த டி. ராமாராவ் வழங்கும்
...ன்ஸ் நிறுவனமும், ஜெயம்
...ன் சன் ஒஃப் மகாலட்சுமி
...எடிட்டர் ஏ.மோகன் வழங்
கும் ஜெயம் கம்பெனி நிறுவனமும் பிரமாண்ட
மான முறையில் தயாரிக்கும் படம் 'சம்திங்...
சம்திங் உனக்கும் எனக்கும்'

இதில் ஜெயம் ரவி, த்ரிஷா ஜோடியாக நடிக்கின்றனர். மற்றும் சந்தானம், ரிச்சாபலேட்' கீதா, சச்சு உட்பட பலர் நடிக்கின்றனர். ஜெயம் ரவி நடித்த ஜெயம், எம்.குமரன் சன் ஒஃப் மகாலட்சுமி ஆகிய படங்களை இயக்கிய அவரது அண்ணன்
...தின் திரைக்கதை எழுதி இயக்குகிறார்.
...மிழ்ப் புத்தாண்டு தினத்தில் திரைக்கு வரும் இந்தப்
...டேஷ் ஒளிப்பதிவு செய்கிறார். தேவி ஸ்ரீபிரசாத் இசை




## ...டும் அவதாரம்



...ய அவதாரம் எடுக்க
...செய்திருக்கிறார்.
...ன அவர் 'என் படங்கள்
...ாற்றுப் போய் விட்டன.
... எனது கார் ஏ.சி வசதி
...க் கொள்ள வேண்டும்
... பாதுகாப்பு சிந்தனை

...ருக்க மாட்டேன். மீண்
...ஜா வருவான் ஜெயிப்
...டணர்ச்சி வசப்பட்டு.

## பூஜா சபதம்



பூஜா மாதவனுடன் 'தம்பி', பிரசாந் துடன் 'தகப்பன் சாமி' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

தமிழ் மார்க்கெட்டை நம்பி பெங்களூரில் இருந்து சென்னை வந்து அண்ணா நகரில் தாயாருடன் குடியிருக்கிறார்.

...பானால் நடிப்பில் முழுமையாக மூழ்கி விடுகிறார். நடிப்புக்
...வன்.
...ப்பில் நடிக்க என்னை மாற்றிக்கொள்ளவும் தயாராக
...ப் பட உலகில் நல்ல நடிகையாக நிரந்தர இடம்பிடிப்பதே
...தற்காக வேகமாக தமிழ் கற்று வருகிறேன் என்கிறார் பூஜா

# தமிழ் ரசிகர்கள் என்னையும் ஏற்றுக்கொள்வார்கள் -சரண்யா பாக்யராஜ்

ஸ்மிருதீஸ் சில்வர் ஸ்கிரீன் சார்பில் கே.பாக்யராஜின் அண்ணன் மகள் எஸ்.மஞ்சுளா தயாரிக்கும் படம் 'பாரிஜாதம்' இந்தப் படத்தில் பாக்யராஜின் மகள் சரண்யா கதாநாயகியாக அறிமுகமாகிறார்.

கனா கண்டேன் படத்தில் வில்லனாக நடித்த பிருதிவ்ராஜ் இப்படத்தின் மூலம் தமிழில் கதாநாயகனாக அறிமுகமாகிறார். இவரது தாயாக ரோஜா நடிக்கிறார். மற்றும் பிரகாஷ்ராஜ், பாக்யராஜ், சீதா ஆகியோரும் நடிக்கின்றனர்.

இப்படத்தின் கதை – திரைக்கதை – வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார் கே.பாக்யராஜ்.

புதியவர் தரண் மற்றும் இரண்டு புதிய இசையமைப்பாளர்கள் மியூசிக்கை கவனித்துக்கொள்கிறார்கள். கே.பாக்யராஜும் ஒரு பாடலுக்கு இசையமைக்கிறார். இந்தப் படத்தைப் பற்றி ஹ ரோயின் சரண்யா....

எனக்கு சிறு வயதிலிருந்தே நடிக்கணும்னு ஆசை. அனா அதை அப்பாவிடம் சொல்லவில்லை. அவரும் அது பற்றிக் கேட்கவில்லை.

ஆனால் அவர் ஒரு பேட்டியில் என் மகனுக்கு நடிப்பில் ஆர்வம் இருக்கிறது. ஆனால் மகளுக்கு இன்ட்ரஸ்ட் இல்லை என்று சொல்லியிருந்தார். இதைப் படித்ததும் அப்பாவிடம் என்னைக் கேட்காமல் அப்படிச் சொல்லிவிட்டீர்களே என்று கோபித்துக்கொண்டேன் அதற்குப் பிறகுதான் எனக்கு சினிமாவில் ஆர்வம் இருப்பதை அவர் தெரிந்து கொண்டார்.

பிறகு மேக்கப் டெஸ்ட் எடுத்து சரின்னு பட்ட பிறகுதான் நடிப்பதற்கு சம்மதித்தார். அவருக்கும் முழு திருப்தி இருந்தது.

இப்போது வருகிற படங்களில் ஹ ரோவுக்குத்தான் அதிக முக்கியத்துவம் இருக்கிறது. ஹ ரோயினுக்கு சில பாடல்களும் சில ஸீன்களும் மட்டும்தான் இருக்கும். அதனால் பர்ஃபாமன்ஸ் பண்ணக் கூடிய வாய்ப்பு கிடைக்காது என்று சொன்ன அப்பா எனக்காக ஒரு கதையை உருவாக்கி, அவ்ரே டைரக்ட் செய்கிறார்.



. அப்பாவோட படங்கள்ல ஹ ரோவுக்கு ஈக்குவலா ஹ ரோயினுக்கும் முக்கியத்துவம் இருக்கும். அதனால்தான் அவங்க திறமையான நடிகைகளா பேசப்பட்டாங்க. அதே மாதிரி நானும் வருவேன்.

என் அப்பாவையும் என் அம்மாவையும் வாழ்த்தி ஏற்றுக்கொண்ட தமிழ் ரசிகர்கள் என்னையும் ஏற்றுக் கொள்வார்கள் என்றார் உறுதியுடன்.

## சினிமாச் சிதறல்

'சுதேசி' படத்தில் விஜயகாந்துடன் வில்லனாக மோதுபவர் மும்பை நடிகர் பிரதீப்ராவத்

* * *


ஒற்றை பாடலுக்கு ஆட மாட்டேன் என்று சொன்ன ரம்பா '1-4-3' என்ற படத்தில் ஒரு பாடலுக்கு ஆடியிருக்கிறார்.

* * *

'செல்லமே' படத்துக்குப் பிறகு ரீமாசென் ஆவலுடன் எதிர்பாக்கும் படம் '1-4-3' புதுமுகம் சசிகாந் நடிக்கும் இந்தப் படத்தின் டைரக்டர் அஜய்குமார். ஓம் நமோ நாராயணா பிலிம்ஸ் மூர்த்தி இதைத் தயாரிக்கிறார்.

* * *

'சிவகாசி' படத்தின் கிளைமாக்ஸ் சண்டைக் காட்சி பதினைந்து நாட்கள் படமாக்கப்பட்டது.




## வளரும் தமிழ்



மலையாளத்திலிருந்து தமிழுக்கு இறக்குமதியான முன்னணி நடிகைகள் நயன் தாரா, அசின், கோபிகா எல்லோருமே தமிழை தங்கு தடையின்றி சரளமாகப் பேசுகிறார்கள்.

நயன்தாராவுக்குத் தமிழில் எழுத்துத் தெரியாது கொஞ்சம் வாசிப்பார்.

அசின் தமிழில் பேசவும் எழுதவும் தெரிந்தவர். கோபிகா தமிழில் வரும் செய்திகளைப் படிப்பார். எழுதவும் கற்று வருகிறார்.

## ஆசியாவிலேயே அதிக சம்பளம் வாங்கும் நடிகர்

ஆசியாவிலே அதிக சம்பளம் வாங்கும் நடிகர்களில் ரஜினி இரண்டாவது இடத்தில் இருக்கிறாராம். முதலிடத்தில் இருப்பவர் ஜாக்கிசான்.

எஸ்.எஸ்.ஸ்டான்லி இயக்கும் மெர்க்குரி பூக்கள் என்ற படத்தில் ஸ்ரீகாந்த் மீராஜாஸ்மின் நடிக்கின்றனர்.

* * *

ரஜினி நடிக்கும் சிவாஜி படத்தை இயக்க ஷங்கர் வாங்கிய சம்பளம் எவ்வளவு தெரியுமா? 12 கோடி ரூபாய் என்கின்றனர்! அம்மாடியோவ்.

* * *

மஜாவுக்குப் பிறகு விக்ரம் நடிக்கும் புதிய படத்தை இயக்க பல் டைரக்டர்கள் போட்டி போடுகிறார்கள்.

## இடியில் மீண்டும் அஜீத் – லைலா

இயக்குனர் பாலா வழங்கும் பி.ஸ்டுடியோஸ் சார்பில் தயாராகும் இடி என்ற படத்தில் அஜீத் ஜோடியாக லைலா நடிக்கிறார். வெற்றிபெற்ற தீனா படத்துக்குப் பிறகு மீண்டும் அவர்கள் இணையும் இந்தப் படத்தை பி.வாசு எழுதி இயக்க, வித்யாசாகர் இசை அமைக்கிறார்.



# குரு மாற்றம்



## கன்னி

**உத்திரம் 2 ,3, 4, ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்**

அன்பார்ந்த கன்னி இராசி வாசகர்களே! சோதனைகள் பல வந்தாலும் அஞ்சாநெஞ்சம் கொண்டு செயல்படும் உங்களுக்கு வருடக்கோள் என வர்ணிக்கப்படும் குரு பகவான் வரும் 19-9-2005 முதல் 20-10-2006 முடிய தன ஸ்தானமான 2ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய உள்ளார். குரு 2 இல் சஞ்சரிப்பதன் மூலம் உங்களுக்கு பொருளாதார ரீதியாக ஏற்றங்கள் ஏற் படும். சிலருக்கு அசையாச் சொத்து சேர்க்கை உண்டாகும். 2இல் குரு இருப்பது மட்டுமன்றி ஓர் இராசியில் நீண்ட காலம் தங்கும கிரகமான சனி பகவான் உங்கள் இராசிக்கு இலாப ஸ்தானமான 11ஆம் வட்டில சஞ்சாரம் செய்வதால் உங்கள் வாழ்வில் வெற்றிகள் குவியும். சொன்ன சொல்லைக காப்பாற்ற முடியும். தொழில ரீதியாகக் கூட நீண்ட நாட்கள நிலவிய சங்கடங்கள் எல்லாம் முழுவதுமாக விலகி நல்லதொரு நிலையினை அடைவீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள கைகூடி கடந்த காலங்களில் நிலவிய வழக்கு, வம்புகள் யாவும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும். சமுதாயத்தில் உங்கள செல்வம், செல்வாக்கு, பெயர், புகழ் கூடக் கூடிய உன்னதமான காலமாகும். இராகு - கேது 21-9-2006 முடிய அனுகூலமற்றுச் சஞ்சரிப்பதால் குடும்ப வாழ்வில் குறிப்பாக கணவன் - மனைவியிடையே ஒற்றுமை குறையும்.

### ஆரோக்கியம்

நீங்கள் பலமும் வலிமையும் கூடுதலாகப் பெற்று பலசாலியாகக் காட்சியளிப்பீர்கள். உடல் உபாதைகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும. புதுப் பொலிவுடன் காட்சியளிக்கப்போகிறீர்கள். உங்கள் மனைவிக்கும் புததிரர்களுக்கும் மருத்துவச் செலவுகள் அவ்வளவாக ஏற்படாது. கடந்த ஏழரைச் சனியில் சோதனைகளைக் கண்ட நீங்கள் இவ்வாண்டு அற்புதமான நற்பலன்களையே அடைவீர்கள். பெற்றோரின் உடல்நலம் அற்புதமாக இருந்து வரும் குடும்பத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களும் தாய், தநதை நலமும் பிரமாதமாக அமையும். நீண்டநாள் வியாதியஸ்தர்களும் தற்போது நலம் பெற்றுச் சுக வாழ்வு, சுமூகமான வாழ்வைப் பெறுவீர்கள்.

### செல்வம், செல்வாக்கு

இதுநாள் வரை சோதனைகளையும் கடன் தொல்லைகளையும் சந்தித்து வந்த நீங்கள் தற்போது மிகுந்த செல்வம், செல்வாக்கினைப் பெற்றுச் சிறப்படைவீர்கள். பல வழியிலும் பணம் வந்து செல்வம சேரும் வீடு, மனை, வண்டி, வாகனம் வாங்கும் அமைப்பும் அதிகமாகும். வரவேண்டிய பணம் தக்க சமயத்தில் வந்து சேர்ந்து மன மகிழ்ச்சி உண்டாக்கும். வங்கியில சேமிக்கும் அளவு வருமானம் வரும். தேவையற்ற வீண செலவுகள் ஏற்படாது. எதிர்பாரா வரவுகள் தொடர்ந்தபடியே இருக்கும். கடந்த காலக் கடன் தொல்லைகள் மறையும். ஆபரணச் சேர்க்கை போன்றவற்றால் பெருமிதம் அடைவீர்கள்.

### குடும்பச் சூழ்நிலை

குடும்பத்தில் இதுவரை இருந்துவந்த மந்தமான நிலை விலகி ஒற்றுமையும் சந்தோஷமும் பெருகும். கணவன் - மனைவியிடையே கலகலப்பிற்குக் குறைவிருக்காது. ஆடை, ஆபரணம், வீடு, வண்டி, வாகனம் வாங்குவீர்கள். மனநிறைவு ஏற்படும். உற்றார், உறவினர், நண்பர்களால் சிறப்பான ஆதரவும் அன்பும் பெறுவீர்கள். இவ்வாண்டில் சுபகாரியங்கள் சிறப்பாக நடைபெறும் சிலருக்கு குழந்தைப் பாக்கியமும் அமையும். குறிப்பாக, ஆண் வாரிசு பிறக்கும். கடன்கள் யாவும தீரும். குழந்தைகளுடன் உல்லாசப் பயணமும் செல்வீர்கள். எல்லா வகையிலும் ஏற்றம் ஏற்படும.

### உத்தியோகஸ்தர்களுக்கு

இடமாற்றம் மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும். அதிகாரிகளின் பாராட்டுதல்களும் மன நிம்மதியும் வேலையில் ஈடுபாடும் அதிகமாகும். வேலைப்பளு குறைந்து சக பணியாளர்களின் உதவிகள், ஆதரவுகள் கூடும். வெளியூர், வெளிநாட்டுப் பயணங்களில் இனிமையும் உற்சாகமும் அனுகூலமும் உண்டாகும். புதிய வேலைவாயப்பில் புதிய தகவலகள் வந்து சேரும். சிலருக்குப் பதவி உயர்வு, உயா அதிகார நிலை அமையும். சிலருக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்கும. மனதில் புத்துணர்ச்சி உண்டாகும். குடும்பத்தாருடன் சேர்ந்து வாழ்கின்ற சூழ்நிலை உருவாகும. சிலர் சம்பள உயாவைப் பெறுவீர்கள். சிலருக்கு கௌரவம் மிக்க பதவி வகித்திடும் யோகமும அமையக்கூடும.

### தொழிலதிபர்களுக்கு

இயந்திரம் தொடர்பான தொழில் செய்ப வர்கள் உங்களின் தொழிலில் வெளிநாட்டுத தொடர்பினை ஏற்படுத்தி வெற்றியும் இலாபமும் அடைந்து மகிழ்வீர்கள். வாகனத் தயாரிப்பு மற்றும் பழுது பார்க்கும் தொழில் அற்புதமான பலனை ஏற்படுத்தி அபிவிருத்தியை ஏற்படுத்தும். மனதில் மகிழ்ச்சியும் உற்சாகம் உண்டாகும். வங்கிக் கடன்கள் முழுமையாக் தீரும். கொடுக்கல், வாங்கல் சிறப்பாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றியைப் பெறும் ஆண்டாகும்.

### மங்கையருக்கு

ஆரோக்கியத்துடனும் குணத்தில் குழந்தையாகவும் செயல்பட்டு குடும்பத்தில் அனைவரது பாராட்டிற்கும நன்மதிப்பிற்கும ஆளாவீர்கள். புதுமுயற்சியால் பொன், பொருள் சேரும். கணவன் - மனைவியிடையே உறவு நல்லவிதமாக அமையும். குடும்ப ஒற்றுமை சிறப்படையும். துணிவாக நின்று திருமண சுபகாரியத்தை முடித்து விடுவீர்கள். வேலைக்குச் செல்லும பெண்கள் ஊதிய உயர்வினை அடைய முடியும்.

### கல்விநிலை

கடின உழைப்பு தேவையில்லாமலே காரிய சாதனை புரிவீர்கள். சிலர் மாவட்ட ரீதியில் முதல் மதிப்பெண் பெற்று பரிசும் பாராட்டும் பெறக்கூடும். மேற்கல்விக்காக செய்யும் முயற்சியில் வெற்றி கிட்டும். மருத்துவம், பொறியியல் கல்வி கற்போர் வெளிநாட்டிற்குச் சென்று கல்வி கற்கும வாய்ப்பு உண்டாகும். விளையாட்டில் கலந்து கொண்டு பரிசுகளையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

### கலைஞர்களுக்கு

அதிர்ஷ்ட தேவதையே வந்து வீட்டில் குடியேறி விட்டதோ என்பது போல் பண வரவு, புதிய வாய்ப்பு, அந்தஸ்து உயாவு போன்ற சிறந்த பலன்களை அடைவீர்கள். தொழில் ரீதியாக ஏற்பட்ட போட்டிகள், வீழ்சசிகளை உதறித் தள்ளிவிட்டு எழுச்சியுடன் உயர்வடைவீர்கள். ரசிகர்கள், மக்களின ஆதரவைப் பெறுவீர்கள. சங்கீதம், நாட்டியத்துறை. நாடகத் துறையில் உள்ளவர்களுக்கு வாய்ப்புக்கள் பெருகும். சிலர் எதிர்பாராமல் கடைசி நேரததில் வெளியூர், வெளிநாட்டு வாயபபினைப் பெறுவீர்கள.

### விவசாயிகளுக்கு

உங்களுக்கு பயிர்த் தொழிலில் இருந்த கஷ்டங்கள், நஷடங்களை ஈடுகட்டும அளவு நன்செய், புன்செய் பயிர்களில் பிரமாதமான விளைச்சலை அடையமுடியும். அரசு மூலம் பிரமாதமான நற்பலன்களையும் வங்கிக் கடன், மான்ய உதவிகளையும் பெற்று நவீன பயிர்தொழில் மூலம் உயர்வினை அடையும் காலமாகும.

### இளைஞர்களுக்கு

சாதனைகளைப் படைத்திடும வல்லமை உருவாகும. அரசுத் தேர்வு எழுதியர்வகளுக்கு அதன மூலம் நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும. எதிலும் முதன்மை வகித்திட விரும்பும் உங்களுக்கு இவ்வாண்டு சாதனை நிறைந்ததாகும். எதிர்கால வாழ்வின் திட்டங்களை ஒழுங்குபடுத்துவீர்கள். மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

### குரு பகவான் துலாத்தில் சித்திரை நட்சத்திரத்தில் 19-09-2005 முதல் 20-10-2005 வரை

வீட்டிலும், வெளியிலும் ஒரே பரபரப்பாகக் காணப்படுவீர்கள். ஆற்றல் மிக்கவர்களும் ஆன்மிக வாதிகளும் பக்க பலமாக இருப்பதால் செய்யும் செயல்களில் தீவிர அக்கறை செலுத்தி வெற்றி பெறுவீர்கள. எதிர்ப்புகள் குறையும். மதிப்பும் மரியாதைகளும் படிப்படியாக ஏற்படும. புண்ணிய காரியங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள் எண்ணிய எண்ணங்கள் ஈடேற உங்களுடைய திறமை முழுவதையும் பயன்படுத்த நேரிடும். திருமணம் சிறப்புடன் கைகூடி மணமக்கள் இனிய வாழ்வினைப் பெறுவீர்கள். ஆண் குழநதை பிறக்கும் யோகமும் அமையும். கலைத்துறையில உள்ளவர்களுக்கு மிகவும் பிரமாதமாக மின்னிப் பிரகாசிக்கும் நிலை உண்டாகி மனமகிழச்சி ஏற்படும். அரசியலில் உயாவான பதவியை அடையும் யோகமும் கட்சியை வழிநடத்திச் செல்லும் யோகமும நம்பிக்கை, நாணயமும் அமையும். தொழில, வியாபாரததில் அற்புதமாக சம்பாதிக்கும் வாய்ப்புகள் உண்டாகும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 21-10-2005 முதல் 26-12-2005 வரை

இக்காலத்தில் உங்களின் முன்னேற்றம மிகவும் பிரமாதமாக அமையும். மனதில் மகிழ்ச்சியும் பூரிப்பும் உண்டாகும். உடல நலம் மிகவும் அற்புதமாக அமையும். மருத்துவச் செலவுகள் குறையும். மனைவியின உடல்நலம் மிகவும் அற்புதமாக அமையப்பெறும். புத்திர பாக்கியம் கிட்டும். புத்திரர்களால் பலவிதமான உதவிகள், அனுகூலங்களை ஏற்படுத்தும். பொருளாதர நிலையில் மிகவும் அற்புதமான பண வரவுகளையும் செல்வச் சேர்கையையும அடைவீர்கள். வீடு, மனை, வண்டி, வாகன யோகமும் மனதில் உற்சாகத்தினை ஏற்படுத்தும். சிலருக்கு பூர்வீக வழியில் பல விதமான அனுகூலங்கள் உண்டாகும். திருமண சுபகாரிய முயற்சிகள் தடபுடலாக நிறைவேறி மனமகிழ்ச்சி உண்டாகும். கணவன் - மனைவியிடையே உறவில் கலகலப்பும் நல்ல அன்னியோன்யமான உறவும் அமையும். தொழில், வியாபார நிலையில் மளமளவென பொருள் உற பத்தியம் விற்பனையும் உண்டாகி நல் இலாபத்தினை அடைகின்ற காலமாகும். கலைஞர்களின் புதிய வாய்ப்புகளில் பிரமாதமான பாராட்டுகள், பரிசுகள் அமையும. விவசாயம் நல் விளைச்சலைத் தரும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 27-12-2005 முதல் 02-03-2006 வரை

இக்கால கட்டத்தில் உங்கள் முயற்சிகள்

# உங்களுக்கு எப்படி?

**19-09-2005 முதல் 20-10-2006 வரை**

வெற்றிபெறும். முன்னேற்றம் மனத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தும் உடல்நலம மிகவும அற்புதமாக இருக்கும். உங்கள பெயா, புகழ், செல்வம், செல்வாக்கு யாவும் உயரக்கூடிய காலமாகும. மனைவியின் உடல்நலம் பிரமாதமாக இருந்துவரும். புததிரர்கள் சிறப்பான ஆரோக்கியத்துடனும் உங்களுக்கு உதவியாகவும் அனுகூலமாகவும் இருப்பார்கள். மருத்துவச் செலவு இல்லாத காலமாக இருக்கும் என்றே சொல்லலாம். தாய் வழியில் சிலருககு ஸதிர சொத்துக்கள் சேரும். உற்றாா, உறவினர், நண்பர்களின் வழியில் திருமண சுபகாரியம் தடபுடலாக நிறைவேறி மறக்க முடியாத இனிய நிகழ்ச்சியாக அமையும். கொடுக்கல், வாங்கலில் மிகவும் அற்புதமான அனுகூலப் பலனை அடையப் போகிறீர்கள். பொருளாதார நிலை மிகமிக அற்புதமாக அமையும். உத்தியோக ரீதியாக விரும்பிய இடமாற்றம் ஏற்பட்டு குடும்பத்துடன் ஒன்று சேருவீர்கள். சிலருக்கு கௌரவமான பதவி உயர்வு அமையும். அரசியலில் கொடி கட்டிப் பறக்கப் போகிறீர்கள். மாணவர்களின் சாதனைகள் பாராட்டப்படும்.

### குரு பகவான் வக்ர நிலையில் 03-03-2006 முதல் 04-06-2006 வரை

உங்களுக்கு தற்போது நன்மை, தீமை கலந்த பலன்களையே ஏற்படுத்தும் காலமாகும். உங்கள் முன்னேற்றம் தடை, தாமதத்துடன் அமையும் எடுக்கும் காரியம் தாமதித்தே முடிவடையும். உடல்நலம் வாய்வு, பித்தம் சம்பந்தமானவற்றால் சிறு சிறு பாதிப்பிற்கு உள்ளானாலும் விரைவில் நலம் ஏற்பட்டு விடும். மனைவி, புத்திரர்களின் வழியில் சிறிதளவு மருத்துவச் செலவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. உங்களுடைய பிடிவாதத்தையும் முன் கோபத்தையும் வீண் செலவுகளையும் குறைத்துக் கொள்வது மிக்வும் உத்தமம். கணவன் - மனைவியிடையே கலகலப்பு குறைவாகத்தான் இருக்கும் ஒருவருக கொருவர் அனுசரித்துப் போக வேண்டும். திருமண சுபகாரிய முயற்சிகளை பிற்பாதி காலத்தில் மேற்கொள்வது நன்மை தரும். கொடுக்கல், வாங்கல் வகையில சிறப்பான அனுகூலப் பலனையும் அடைவீர்கள். சிலருக்கு பெரும் தொகைகளை ஈடுபடுத்தி புதிய தொழில்நுட்பக் கருவிகளை வாங்கிடும் அமைப்பையும் உண்டாக்கும். சிலருக்கு பதவி நிரந்தரம், பணி நிரந்தரம் ஏற்படும். அரசியலில் செல்வாக்கு, ஆதரவு உயரும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 05-06-2006 முதல் 18-08-2006 வரை

வெளிநாடு மற்றும் வெளிநாட்டுத் தொடர்புடையவற்றால் அதிக சந்தோஷத்துடன் இருப்பீர்கள். இக்காலத்தில் உங்களுக்கு உடல் நலமும் மனநலமும் சிறப்பாக அமைந்திருக்கும். பலமும் வளமும் கூடியிருக்கும. அன்றாடச செயல்களில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். மனைவியின் நலமும் சிறப்பாக இருந்துவரும். மகன்களின் வழியல் ஏற்பட்ட மருத்துவச செலவுகள் மறைநது முன்னேற்றம் உண்டாகும். ஆடை, ஆபரணம், நவீனப் பொருள்கள் சேரும். உற்றார், உறவினர்களின் உதவியும் ஆதரவும் மனத்திற்குத தெம்பூட்டும். கணவன் - மனைவியிடையே உறவுகள் சிறப்பாக அமையும். சகோதரர் ஒற்றுமை ஓங்கும். பெரிய மனிதர்களின் உதவியால் தொழில், வியாபாரத்தினை பிரமாதமாக அபிவிருத்தி செய்வீர்கள் சிலருக்குப் புதிய தொழில் வாய்ப்புகளும் அமையும். மாணவர்கள் சாதனை மேல் சாதனை செய்வீர்கள். விவசாயிகள் விளைபொருளகளுக்கு நல்ல விலையைப் பெறுவீர்கள். கலைஞர்களுக்குப் பாராட்டுக்கள் குவியும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 19-08-2006 முதல் 20-10-2006 வரை

உங்கள் வளர்ச்சிக்கான சிறப்பான காலமாக அமையும். மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். மனைவி மிகவும் பிரமாதமாக சுபட்சமுடன் இருந்துவருவாள். புத்திரர்கள் நலமும் வளமும் அனுகூலமும் பெற்று பிரமாதமாக இருப்பார்கள். கணவன் - மனைவியிடையே உறவு அன்னியோன்யமாகும். திருமணமாகாதவர்களுக்கு இக்காலத்தில் நல்ல வரன் கைகூடி தடபுடலாக திருமணம் நடைபெற்று வாழ்வல் மறக்கமுடியாத இனிய நிகழ்ச்சியாக அமையும். சிலர் வட்டைக் கட்டிக்குடிபுகுவாக்ள். ஆடை, ஆபரணம் சேரும் வாங்கிய கடன்களை அடைத்துவிடுவீக்ள் பெரிய மனிதர்களின் நட்பும் ஆதரவும் அமையும். தொழில், வியாபாரம் மிகவும பிரமாதமாக விரிவடையும். உள்ளூர், வெளியூர்களிலிருந்து வரும் செய்திகள் சிறப்பான இலாபத்தைத் தரும். மருத்துவம், கணிதம், போன்றவற்றைப் புயில்வோர் பாராட்டப்படுவீகள். விவசாயிகளுக்கு மேலும் விளைநிலம் அமையும். கலைஞர்கள் புதிய வாய்ப்பினைப பெறுவீர்கள்.

**ஜோதிட மேதை**
**பாலமுருகன்**

### நட்சத்திரப் பலன்கள்

**உத்திரம் 2, 3, 4 ஆம பாதங்கள்:**

பொருளாதார நிலையில் பிரமாதமான சேமிப்புகள், வீடு, மனை, வண்டி, வாகன அமைப்பும் உண்டாகும். இதுவரை திருமணமாகாமல் தள்ளிப்போனவர்களுக்கு இவ்வாண்டில் அற்புதமான மணவாழ்வு அமையும் புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும். அரசியலில உத்தியோகத்தில் உயர் பதவிகளை வகித்திடும் யோகம் ஏற்படும்.

**அத்தம்:**

எதிலும் சுறுசுறப்புடன் செயல்படுவீகள், தொழில், வியாபாரம், கூட்டுத்தொழில் போன்றவற்றில் சிறப்பான பலனை அடைவீர்கள் புதிய தொழில் தொடங்குவது பெரும் முதலீடுகளைச் செய்வது போன்ற சிறப்பான நற்பலன்கள் அமையும். கொடுககல், வாங்கலில் சாதகமான பலனுண்டு. கடன்கள் விலகி அசையாச் சொத்து சேரும். வம்பு, வழக்குகள் தீரும்.

**சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்:**

அற்புதமான செல்வச் சேர்க்கையும் செல்வம், செல்வாக்கையும் அடைகின்ற காலமாக அமையும். இழந்துவிட்ட பொருள்களை மீண்டும் பெறுவீர்க்ள் எடுக்கும் முயற்சிகள் யாவிலும் வெற்றி மேல் வெற்றி உண்டாகும். சிறு சிறு குடும்பப் பிரச்சினைகளையும் அனுசரித்துப் போகும் உங்களது குணத்தினால் சமாளித்து. மனதில் பூரிப்புடன் வாழ்வீர்கள்.

**பரிகாரம்:**

உங்கள் இராசிக்கு ஜென்ம இராசியில் கேது 7இல் இராகு சாதகமற்று சஞ்சரிப்பதால் வெள்ளி, செவ்வாய், ஞாயிற்றுக்கிழமைகளில் இராகு கால பூஜையில துர்க்கைக்கு எலுமிச்சம் பழ விளக்கு ஏற்றுவது, குங்கும அர்ச்சனை செய்வது, சிவப்பு மலர்களால் பூஜிப்பது, விநாயகரைத் தரிசிப்பது. சர்வேஸ்வரனை வழிபாடு செய்து வருவது மூலம் உங்கள் குடும்ப வாழவில் ஏற்படும் சோதனைகளைக் குறைத்துக கொள்ள முடியும்.

(தொடரும்...)

## கொமிசியப் பொன்விழா

(ஊர்காவற்றுறை)

யாழ்.மறை மாவட்ட புனித-மரியாயின் சேனையின் கொமிசிய ஐம்பதாவது ஆண்டு நிறைவுவிழா (1955-2005) பொன்விழாவாக யாழ்.புனித-மரியாள் பேராலயத்தில் கூட்டுத் திருப்பலியுடன் கடந்த 4ஆம் திகதி நடைபெற்றது.

பொன்விழாத் திருப்பலி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

பொன்விழா மலரை குருமுதல்வா ஜே.நிக்கிலஸ் அடிகள் வெளியிட்டு வைத்தார்.

சிறப்பு பிரதிகளை சுங்கத் திணைக்கள அதிகாரி சாள்ஸ் மத்தியூஸ், கிராம அலுவலர் ஜே.பத்திநாதன, வீடமைப்பு திணைக்கள அதிகாரி குருசுமுத்து ஜேக்கப் உட்பட பல பிரமுகர்கள் பெற்றுக்கொண்டனர். (ற)

## திருநாள் திருப்பலி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை அரசினர் பொது வைத்தியசாலை வளாகத்திலுள்ள அன்னை வேளாங்கன்னி சிற்றாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00மணிக்கு ஊர்காவற்றுறை பங்குத் தந்தை அருட்திரு சேவியர் ஜேமிஸ் அடிகள் தலைமையில் திருநாள் திருப்பலி நடைபெறவுள்ளது.(ற)

## வீதி புனரமைப்பு

(பருத்தித்துறை)

சுமார் 20 வருடங்களுக்கு மேலாக திருத்திப் புனரமைக்கப்படாதிருந்த புலோலி குரும்பைகட்டி-பொது நூலக வீதி சுமார் 6.25 இலட்சம் ரூபா செலவில் திருத்திப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் இவ் வீதியைப் புனரமைப்பதற்கான நிதியை ஒதுக்கிடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-52)

# அழிவுகள் யாவற்றிற்கும் அன்பின்மையே காரணம்

கிறிஸ்தவ வாழ்வின் பெருங்கொடையாக இருப்பது மன்னிப்பு ஆகும். மன்னித்தல் பற்றி பல கதைகள் உண்டு.



மன்னிப்பின் மூலமாக மலர்ந்த வாழ்வுகள் ஏராளம்.இறைவன் எங்களை மன்னிக்கவில்லையென்றால் எம் வாழ்வுகள் எப்போதோ மடிந்திருக்கும்.

விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்தனர் பரிசேயப் பரம்பரையினர் கல்லால் எறிந்து கொல்வதற்கு. இயேசு கூறினார் அவர்களுக்கு "உங்களில பாவம் இல்லாதவன் அவள மேல் முதல் கல்லை எறியட்டும்" என்றார். ஒருவர் பின் ஒருவராக வந்த எல்லோரும் கற்களைக் கீழே போட்டுவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்று சென்றனர். இயேசு பெண்ணைப் பார்த்து "எவரும் தீர்ப்பு வழங்கவில்லையா? நானும் தீர்ப்பு வழங்கவில்லை சமாதானமாய் போ இனிப்பாவம் செய்யாதே" என்றார். மன்னிப்பு அப்பெண்ணுக்கு மறுவாழ்வு கொடுத்தது.

### வரலாற்றில் மன்னிப்பு

ஒருமுறை சீடர்கள் இயேசுவைச் சூழ்ந்திருந்த போது தலைமைச் சீடர் பேதுரு இயேசுவிடம் "ஒருவன் எனக்கு எதிராகக் குற்றம் செய்தால் அவனை ஏழுமுறை மன்னித்தால் போதுமா" என்று கேட்டார். இயேசு அப்படியன்று எழுபது ஏழுமுறை என்றார். அதாவது மன்னிப்புக்கு அளவே இல்லை என்பது கருத்தாகும்.

இயேசு பாவிப் பெண்ணை மன்னிததார். சக்கேயுவை மன்னித்தார். இறுதியாக தம்மை வதைத்து சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்தார்.ஒவ்வொரு மன்னிப்பும் ஓராயிரம் உறவுகளை உருவாக்கும். "சட்ட திட்டத்தை வாழ்வும்,சட்டமியற்றும் மனிதனை விட வாழ்வை தரும் கடவுளும் மேலானவரன்றோ, சட்ட திட்டங்களால் ஒழுங்கை நிலை நாட்டலாம். ஆனால் அன்பை வளர்க்கமுடியாது. அன்பினாலேதான் அன்பை வளர்க்க முடியும்."கடவுளின் செயற்பாடுகள் அனைத்தும் அவரின் அன்பிலிருந்தே புறப்படுகின்றன" என்று புனித லோறன்ஸ் கூறுகிறார்.

### மன்னிப்பே மகிழ்வு தரும்

ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்று அன்பும் மன்னிப்பும் திகழ்கின்றன. உங்களை மகிழ்வில்,நிறைவில் வைத்திருப்பதற்கு மன்னிப்பு என்ற மாமருந்து. அன்பு என்ற சுகத்தை அளிக்கின்றது. மன்னிக்கும் உயர்ந்த பண்பினால் மனிதன் தெய்வமாக மாறுகிறான். மன்னிப்பு என்ற சிறிய செயலானது அறுந்த உறவுகள் மலரவும், மலர்ந்த உறவுகள் தொடரவும் பாலமாகவும் இருக்கின்றது

பேதுருவுக்கும் யூதாசுக்கும் உள்ள வித்தியாசம் பேதுரு செய்த பிழையை நினைத்து வருந்தி கண்ணீர் மல்க மன்னிப்புக் கேட்டார்.இயேசுவும் அவரின் பாவங்களை மன்னித்தார். அவருக்கு மறுவாழ்வு கொடுத்தார் . திருச்சபையின தலைவராக அவர் உறுதியுடன் இயேசுவுக்காக உயிரை அளிக்கும் அளவுக்கு உறுதிபெற்றார்.ஆனால் யூதாஸ் மனம் வருந்தினான் மன்னிப்புக் கேட்கவில்லை. அதனாலே அவன் மன்னிக்கப்படவில்லை. தானே தனக்கு மரணத்தை வருவித்துக் கொண்டான. அவனுடைய வராலாறு கறைபடிந்ததானது.

### பரமபிதாகாட்டிய பாதை

### மன்னிப்பின் மகத்துவம்

உண்மை அன்பானது குற்றம் செய்தவனை மன்னிக்கும்.அன்னை தெரேசாள தமது சேவைக்கு பணம் சேகரிக்கச் சென்றபோது பணக்காரன் ஒருவன் அவரது கைகளில் காறித்துப்பினான். அன்னை அவனை மன்னித்தாள். புன்னகை புரிந்த முகத்துடன் மீண்டும் மறு கையை நீட்டினாள பணக்காரன் வெட்கித் தலைகுனிந்தான். தன் தவறை உணர்ந்தான் தன் செயலுக்குப் பரிகாரமாக அன்னைக்கு ஏராளம் உதவிகளைச் செய்தான் . இது எதனால் வந்தது மன்னித்தலினால் மனிதநேயம் மலர்ந்தது.

அமரத்துவமடைந்த பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை ஒருவன் துப்பாக்கியினால் சுட்டான். பாப்பரசர் குற்றுயிராகி மீண்டும் உயிர்பெற்றார். பாப்பரசர் தம்மைச் சுட்டவனை மன்னிக்க எண்ணினார். சிறையில் அடைக்கப்பட்ட கொலையாளியைச் சந்தித்து ஆறுதல்கூறினார். அவனைக் கட்டித்தழுவி அன்பு காட்டினார். அவனை மன்னித்தார். மன்னிப்பு இல்லாமையே உலகம் மரணங்கள் நிறைந்த பூமியாக உள்ளது. அன்பு இல்லாமையே அழிவுகள் பிறக்கக் காரணமாக உள்ளது. இயன்றவரை நன்மை செய்யக் கற்றுக்கொள்வோம். அயலானுககு தீமை நினைப்பதை விலக்குவோம். ஆழ்ந்த உறக்கமும் மன நிம்மதியும் எமை வந்துசேரும். □

**அமலன் அருள்தாசன்**

## இராசி பலன்

**11.09.2005**
**(ஆவணி 26, ஞாயிற்றுக்கிழமை)**
**அட்டமி பின்னிரவு 12.17 மணிவரை**
**கேட்டை முன்னிரவு 10.58 மணிவரை**
**இராகுகாலம் 4.33-6.03 மணிவரை**
**சுபநேரம் 9.03-10.33 மணிவரை**
**நாலாம் ஆவணி ஞாயிறு**

- **மேடம்**: அபகீர்த்தி, ஆரோக்கியக் குறைவு, பிறருக்கு உதவுதல், வேலைச் சுமை.
- **இடபம்**: குடும்ப நலம், தெய்வ சிந்தை, எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம்.
- **மிதுனம்**: பகைவர் நேசம், தேக நலன், போசன சுகம், காரிய நன்மை.
- **கடகம்**: புத்திரரால் கவலை, தொழில் சிந்தை, பூர்வ புண்ணிய கருமம், முயற்சி தாமதம்.
- **சிங்கம்**: மனக்கிலேசம், கல்வியில் ஆர்வம், கடின முயற்சி, உறவினர் சந்திப்பு.
- **கன்னி**: சகோதரர் உதவி, போசன சுகம், காரிய அனுகூலம், தெய்வ சிந்தை.
- **துலாம்**: திடீர் நன்மை, பண விரயம், குடும்ப கவலை, காரிய தாமதம்.
- **விருச்சிகம்**: நண்பர்கள் உதவி, வெகுமானம், எடுத்த காரியம் கைகூடும், அதிகாரம்.
- **தனுசு**: காரிய அலைச்சல், சுபசெலவு, உறவினர் வெறுப்பு, தொழில் சிந்தை.
- **மகரம்**: குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், தெய்வ தரிசனம், விருந்துபசாரம்.
- **கும்பம்**: புதிய திருப்பம், அதிகாரம், நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு.
- **மீனம்**: நிர்ப்பந்த நிலை, புதிய திட்டமிடல, பிரயாணம், அதிக பிரயாசை.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

**- வளவன்**

## பரு.மத்திய மருந்தகத்திற்கு ரூ.60 இலட்சத்தில் புதிய கட்டடம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மத்திய மருந்தகத்திற்குச் சுமார் 60 இலட்சம் ரூபா செலவில் பருத்தித்துறை தெங்கங் கிணற்றடி காணியில் புதிய மாடிக்கட்டடமொன்றைச் சுகாதாரத் திணைக்களம் நிர்மாணிக்கவுள்ளது.

இக்கட்டட நிர்மாணத்திற்கென திணைக்களத்தால் முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட 30 இலட்சம் ரூபா நிதி செலவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான அடிக்கல் நாட்டும் விழா பருத்தித்துறை நகரசபை முன்னால் உபதலைவரும் பருத்தித்துறை மத்திய மருந்தக அமைப்புக்குழுத் தலைவருமான பி.வின்செனற்டீ போல் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கிராமசேவை அலுவலர் ஆர்.புலேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு ப.இருதயதாஸ் அடிகளார், சிவஸ்ரீ.தானுவாசுதேவக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினர்.

யாழ்.சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் சம்பிரதாய பூர்வமாக அடிக் கல்லை நாட்டிவைத்ததையடுத்து பல பிரமுகர்கள் இக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தனர்.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை, யாழ். கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.குகநேசன், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள், யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடமராட்சி கடற்புலிகள் அரசியல் பொறுப்பாளர் எஸ்.அன்பழகன், பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திருமதி கமலாதேவி திருச்செல்வநாயகம் உட்பட இன்னும் பலர் இதில் உரையாற்றினர்.

நேவு ஆஸ்பத்திரி என அழைக்கப்பட்டு வந்த இந்தப் பருத்தித்துறை மத்திய மருந்தகம் யுத்த அனர்த்தங்களையடுத்து பருத்தித்துறை துறைமுகம் பிரதேசத்திலிருந்து பருத்தித்துறை ஆத்தியடியிலுள்ள தனியார் கட்டடமொன்றிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது.

பின்னர் அங்கிருந்து தும்பளை மதவடியில் உள்ள தனியார் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுத் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை நகரசபையால் ஏற்கனவே வீடமைப்புத் திட்ட நோக்கத்திற்காகச் சுவீகரிக்கப்பட்டிருந்த தற்போது கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வரும் காணி பருத்தித்துறை நகரசபையால் பயன்படுத்தப்படாமல் இருந்து தற்போது சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ற-52)

## பாடசாலைகளில் முரண்பாடுகள் தீர்ப்பதற்கு விசேட திட்டம்

பாடசாலைகளில் ஏற்படும் முரண்பாடுகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு இணக்கப்பாட்டு பரிவுகளை நிறுவும் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்த நீதியமைச்சு தீர்மானித்துள்ளது.

கல்வியமைச்சின் ஒத்துழைப் புடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று நிதியமைச்சின் மேலதிக செயலாளர் தாரா விஜயதிலக்க தெரி வித்துள்ளார்.

முதற்கட்டமாக 30 பாடசாலைகளில் இணக்கப்பாட்டுப் பிரிவுகளை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாடசாலைகளில் ஏறபடும் பிரச்சினைகளில் கிராம வாசிகள் தலையிடுவதனால மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தாரா விஜயதிலக்க தெரிவித்துள ளார். இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுவதற்கு பாடசாலைகளில் நிறுவப்படுகின்ற இணக்கப்பாட்டுப் பிரிவுகள் உதவியாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரிவுக்கு தெரிவுசெய் யப்படுகின்ற மாணவ, மாணவிகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்கு வதற்கு நீதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (து-9)

## தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு



**இன்று எட்டாம் திருவிழா**

**உயிருமானவள் உடலுமானவள்**

செம்மை யானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மை யானவள் டின்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

உயிரு மானவள் துர்க்கா உடலு மானவள்
உலக மானவள் எந்தன் உடமை யானவள்
பயிறு மானவள் துர்க்கா படரும் கொள்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை

என். சொக்கன் 18

ராஜ்குமாரின் கடத்தல் நடந்த தொட்டகாஜனூர், தமிழக எல்லைக்குள் இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தில், தமிழக அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் அவசியம் என்று சிலர் சொல்கிறார் கள். அதை ஏற்ற கர்நாடக முதல்வர், உடனடியாக தமிழக முதல்வரைத் தொலைபேசியில் அழைத்துப் பேசுகிறார்.

ராஜ்குமாரைச் சீக்கிரத்தில் மீட்பதற்கான எல்லா உதவிகளையும், தமிழக அரசு செய்யும் என்று அப்போதைய தமிழக முதல்வரான மு. கருணாநிதி உறுதி அளிக்கிறார். இதுபற்றி மேலும் விவாதிப்பதற்காக, கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா, சென்னை செல்வது என்று முடிவாகிறது.

பின்னர், ராஜ்குமார் கடத்தப்பட்டிருக்கும் செய்தியும், அது குறித்த அரசின் அதிகாரபூர்வமான அறிக்கையும், பத்திரிகைகளுக்குத் தரப்படுகிறது. அந்த விநாடியிலிருந்து, கர்நாடகம் முழுவதும் கலவர நெருப்புப் பற்றிக் கொள்கிறது.

இன்றும், கன்னடர்கள் மத்தியில், 'சூப்பர் ஸ்டார்' அந்தஸ்தில் உலாவரும் ராஜ்குமார் கடத்தப்பட்ட செய்தி, அவருடைய ரசிகர்களுக்கு ஆத்திரமூட்டுகிறது. அவரைக் கடத்தியவன், தமிழ் பேசக்கூடிய ஒருவன் என்ற உண்மை, எரியும் நெருப்பில் நெய் ஊற்றியது போல் ஆகறது. மாநிலம் முழுதும் அடிதடி, கலாட்டா, ஊர்வலங்கள். கர்நடகத் தமிழர்கள் பலர் தாக்கப்படுகிறார்கள். நிலைமை கட்டுக்குள் வர, ஒன்றிரண்டு நாள்கள் ஆகின்றன.



இதற்கிடையே, முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா, அமைச்சர் மல்லிகார்ஜுன கார்கே உட்பட, கர்நாடகப் பிரதிநிதிகள், சென்னையில் தமிழக முதல்வரைச் சந்திக்கிறார்கள். இந்த விஷயத்தல் இரண்டு மாநிலங்களும் எப்படி இணைந்து செயல்படலாம் என்று விவாதிக்கப்படுகிறது.

அடுத்து, காட்டுக்குள் யாரைத் தூதுவராக அனுப்புவது என்று முக்கியமான கேள்வி எழுகிறது.

வீரப்பனுக்கு ஏற்கனவே அறிமுகமான, அவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரைத் தான், தூதுவராக அனுப்பமுடியும். அந்தக் கண்ணோட்டத்தல் சிந்திக்கிறபோது, 'நக்கீரன்' பத்திரிகையின் ஆசிரியர் ஆர். கோபால் தான் இந்தப் பொறுப்புக்குச் சரியானவர் என்று ஒருமனதாக முடிவெடுக்கப்படுகிறது. அவரும் இதற்குச் சம்மதிக்கிறார்.

இதையடுத்து, இரு மாநிலங்களின் பிரதிநிதியாக, 'நக்கீரன்' கோபாலை வீரப்பனிடம் பேச்சு வார்த்தைக்கு அனுப்புகிற முடிவு, பத்திரிகையாளர்களிடையே அறிவிக்கப்படுகிறது.

பின்னர், பெங்களூருக்குத் திரும்பும் கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணாவை, நடிகர் ரஜினிகாந்த் சந்தித்துப் பேசுகிறார். (1) ராஜ்குமார் கடத்தப்பட்ட செய்தி, ரஜினிகாந்துக்கும் அதிர்ச்சி தான என்றாலும், கொஞ்சம் பணம் கொடுத்தால், வீரப்பன் அவரை விடுவித்துவிடுவான் என்று அவர் நம்பிக்கையோடு பேசியதாகத் தெரிகிறது.

ஆனால், வீரப்பன் எதிர்பார்ப்பது, பணத்தைத்தானா? அல்லது வேறு ஏதாவதா?

முக்கியமான இந்தக் கேள்விக்கான பதிலை, யாரும் உடனடியாகத் தெரிந்து கொண்டுவிட முடியாது. முதலில், 'நக்கீரன்' கோபால் காட்டுக்குள் செல்லவேண்டும்; வீரப்பனைச் சந்தித்துப் பேசவேண்டும்; அவன் மனத்தில் என்ன இருக்கிறது ஏன்பதை வெளிப்படையாக அறிந்த பிறகு தான், தமிழகமோ, கர்நாடகமோ அதற்கேற்ற நடவடிக்கைகளைச் செய்யமுடியும். அதுவரை, எல்லாமே கணிப்புகள் தான், ஊகங்கள் தான். இந்த நிச்சயமற்ற தன்மையால், எல்லாருமே ஒரு வித பதற்றத்துடன் காத்திருக்கிறார்கள்.

காட்டுக்குள் 'நக்கீரன்' கோபால் செல்வதற்கு முன் கேஸட்டில் வீரப்பன் சொன்னபடி அவனை தேடிக்கொண்டிருந்த அதிரடிப் படையினரின் நடவடிக்கைகள் அனைத்தும், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்ட்டன.

இதற்கிடையே, ராஜ்குமாரின் குடும்பத்தினர், வீரப்பனோடு பேசுவதற்கு, அகில இந்திய வானொலியைப் பயன்படுத்துகிறார்கள். காட்டுக்குள், வீரப்பன் தினந்தோறும் ரேடியோ கேட்கிறவன் என்ற செவிவழிச் செய்திதான், இந்த யோசனையை அவர்களுக்குத் தந்திருந்தது.

ராஜ்குமாரின் மனைவி பர்வதம்மாவும், மகன் ராகவேந்திராவும் ரேடியோவில் பேசுகிறார்கள். அவரை உடனடியாக விடுவித்துவிடும்படி வீரப்பனிடம் கோரிக்கை எழுப்பப்படுகிறது. ஒருவேளை, வீரப்பன் அதை ஏற்காவிட்டால், ராஜ்குமாரை அதிகம் நடக்க வைக்க வேண்டாம். அவர் சாப்பிட வேண்டிய மாத்திரைகளை வேளாவேளைக்கு அவருக்குத் தரவேண்டும் என்றெல்லாம் உப-கோரிக்கைகள். தனக்காக மட்டும் ஒலிபரப்பப்பட்ட இந்த வேண்டுகோள்களை, வீரப்பன் கேட்டானோ இல்லையோ. ஆனால் அடுத்த ஒன்றிரண்டு நாள்களுக்குள், அவனிடம் இருந்து வேறு சில ஒலி நாடாக்கள் வந்தன.

ஒரு கேஸட்டில், டாக்டர் ராஜ்குமார் பேசியிருந்தார். காட்டு வாழ்க்கை தனக்குப் பிடித்திருப்பதாகவும், வீரப்பன் தன்னை ஒழுங்காகக் கவனித்துக் கொள்வதாகவும் தெரிவித்திருந்த அவர், தன்னுடைய ரசிகர்களை அமைதியாகவும் பொறுமையோடும் இருக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தார். அதிலும் குறிப்பாக, தமிழர்களை யாரும் தாக்க வேண்டாம் என்பது தான் ராஜ்குமார் பேச்சின் சாரம்.

இதையடுத்து, அரசாங்கத்துக்கும் போலீஸாருக்கும் சில வார்த்தைகள்-வீரப்பனின் கோரிக்கைகளைச் சீக்கிரத்தில் நிறைவேற்றிவிடுங்கள். அவனைத் தாக்குவதற்கு போலீஸை அனுப்பாதீர்கள். அப்புறம், எங்களுக்குத்தான் பிரச்சினை.

இந்த கேஸட் கிடைத்த மறுநாள், வீரப்பனிடம் இருந்து இன்னொரு கேஸட் வந்தது. அதில், அவன் தன்னுடைய பத்து அம்சக் கோரிக்கைகள் அனைத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தான்.

1. காவிரி நதி நீர் ஆணையத்தின் இடைக்கால உத்தரவுப்படி, ஒவ்வொரு வருடமும் தமிழகத்துக்கு கர்நாடக அரசு 205டி.எம்.சி தண்ணீரைத் திறந்துவிட வேண்டும். காவிரிப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வு காணப்பட வேண்டும்.

2. 1991 ஆம்ஆண்டு, காவிரிப் பிரச்சினையையொட்டி, கர்நாடகத்தில் நடைபெற்ற கலவரங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு, முறைப்படி நஷ்டஈடு தரவேண்டும். அத்துடன், கர்நாடக தமிழர்கள் அனைவருடைய நலனுக்கும், கர்நாடக அரசு பொறுப்பேற்க வேண்டும்.

கர்நாடகத்தில், தமிழர்களும் ஏராளமாக வாழ்கிறார்கள். ஆகவே, இந்த மாநிலத்தில், தமிழையும ஓர் ஆட்சி மொழியாக அங்கீகரிக்க வேண்டும்.

4. பெங்களூரில் திறக்கப்படாமல் மூடிக் கிடக்கிற திருவள்ளுவர் சிலையை, உடனடியாகத் திறக்கவேண்டும்.

5. அப்பாவிப் பொதுமக்கள் மீது தமிழக மற்றும் கர்நாடக அதிரடிப்படையினர் நடத்திய அராஜகங்களைப் பற்றி விசாரிப்பதற்காக நீதிபதி சதாசிவா தலைமையில் ஒரு விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. ஆனால், அந்தக் குழுவின் விசாரணைகள் தொடரமுடியாதபடி, கர்நாடக உயர்நீதி மன்றம் தடைவிதித்திருக்கிறது. அந்தத் தடையை நீக்கி விசாரணையைத் தொடர்ந்து நடத்த கர்நாடக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கமிஷனின் அறிக்கை பொதுமக்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும். பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தலா ரூபாய் பத்து இலட்சமும், கொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களுக்குத் தலா ரூபாய் பத்து இலட்சமும் மற்ற பாதிப்புகளுக்கு உள்ளானோருக்கு தலா ரூபாய் ஐந்து இலட்சமும் நஷ்ட ஈடாக வழங்கப்பட வேண்டும். விசாரணை கமிஷனால் 'குற்றவாளிகள' என்று அடையாளம் காட்டப்படும் காவல்துறை அதிகாரிகளைத் தண்டிக்க வேண்டும்

(தொடரும்)

# மஹிந்தவின் 'வெற்றிலை' தெரிவுக்கு ஸ்ரீ.சு.கட்சி முக்கியஸ்தர்கள் விசனம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜ பக்ஷ தனது கூட்டாளிகளான ஜே.வி.பியுடன் இணைந்து தனது தேர்தல் சின்னமாக வெற்றிலையை தெரிவு செய்துள்ளமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்கள் மத்தியில் பெரும் விசனத்தை தோற்றுவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுநத்திரக் கட்சியின் சின்னமாக 'கை' விளங்குகிறது. இம் முறையும் 'கை' சின்னம் தெரிவுசெய்யப்படவில்லை என்பதில் சிரேஷ்ட உறுப்பினர்கள் கவலையடைந்துள்ளனர்.

1988 ஆம் ஆண்டு தேர்தலின் போதும் 1989 ஜனாதிபதித் தேர்தலின் போதும் கை சின்னம் இறுதியாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அப்போது சிறிமாவோ பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாக இருந்தார்.

ஜே.வி.பிக்கும் மஹிந்த ராஜபக்ஷவிற்குமிடையிலான கொள்கை உடன் படிக்கை கடந்த வியாழக்கிழமை அலரிமாளிகையில் கைச்சாத்திடப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை, ஜே.வி.பி, ஹெல உறுமயவின் கொள்கைகளுக்கு மஹிநத ராஜபக்ஷ உடன்பட்டமையை பொதுஜன ஐக்கிய முன்னணியின் அங்கத்துவ கட்சிகள் சில விரும்பவில்லை.

பிரதமருடனான சந்திப்பின்போது இதனை வலியுறுத்தியுள்ள அக்கட்சிகள், பொதுக்கட்டமைப்பு கைவிடப்பட எடுத்த முடிவிற்கும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. (ற-6)

## சட்டவிரோத இத்தாலி பயணம்;

# இலங்கையில் தங்கியிருந்த 57 வெளிநாட்டவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலிக்கு செல்லும் நோக்கில் இலங்கையில் தங்கியிருந்த 57 வெளிநாட்டவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக பல திட்டங்களை வகுத்த முககிய வர்த்தகர் ஒருவரும் அவரது உதவியாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத புலம்பெயர்வாளர்களை கைதுசெய்யும் பிரிவின் அதிகாரி தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவும் அண்மைக் காலங்களில் இவ்வாறான நடவடிக்ககைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும்,இந்த நடவடிக்கைகள் தொடர்பாகக் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் சந்தேக நபர்கள் சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வரப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையை முன்னெடுக்கும் முக்கிய சந்தேக நபர் இலங்கையரான அதேவேளை, அவர் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளாரா? என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ற-9)

# கிழக்கு மாகாண படையினர் மீது 5வாரங்களில் 52 தாக்குதல்கள்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த 5வாரங்களில் பாதுகாப்பு தரப்பினர் மீது 52 தாக்குதல் சம்பவங்கள் மேற்கெள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு,அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இந்தத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பாதுகாப்புத் தரப்புகள் தெரிவித்துள்ளன..

இந்தச் சம்பவங்களில் 7 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்ததோடு 35பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் 29 தாக்குதல்கள் இராணுவ தரப்பினர் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இந்தச் சம்பவங்களில் 4பேர் உயிரிழந்ததோடு 16 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காவல்துறையினர் மீது மேற்கொள்ளப்பட்ட 19 தாக்குதல் சம்பவங்களில் 3 பொலிஸார் உயிரிழந்ததோடு 18பேர் காயமடைந்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினர் மீது 3 தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு அதிரடிப்படை சிப்பாய் காயமடைந்துள்ளார்.

இதேவேளை, 5வாரங்களில் கிழக்குப் பகுதியிலேயே அதிகளவிலான தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக படைத்தரப்பினர் வெளியிட்ட புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# ஆவரங்கால் ம.வி.கழக அணி கரப்பந்தாட்ட சம்பியனானது

(சுண்டுக்குளி)

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடாத்தி வந்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு விழாவும் கடந்த 5ஆம் திகதி இரவு 8.30 மணி தொடக்கம் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் விவேகானந்த சனசமூக நிலையத்தலைவர் தவராஜசிங்கத்தின் தலைமையில் நடைபெற்றன.

மூன்றாம் இடத்திற்கான தெரிவு ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணி மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக அணியை 2:1என்ற செற்கணக்கில் 25:21,23:25,25:21,என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக்கொண்டது,

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை 3:1என்ற செற்கணக்கில் 25:20,25:19,26:28,25:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் பலத்த போட்டியின் பின் வென்று சம்பியன கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இவ் ஆட்டங்களுக்கு நடுவர்களாக விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களான ஜெ.ரமணன்,அப்புத்துரை ஆகியோர் கடமையாற்றினார்கள்

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினா சுரேஷ் பிரேமச்சந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக 'நடுநிலைச் செம்மல்' கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கம் (ஜே.பி)யும் தொழிலதிபர் விஜேய குணா ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ-110)

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செய்யின் - குறள்

வலம்புரி

# பூசல் வலுக்கிறது

ஜனாதிபதித் தேர்தலை 2005இல் நடாத்த வேண்டுமென்ற உயர்நீதிமன்றத் தீர்ப்பு வெளியானதிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நடவடிக்கைகளில் பாரிய மாற்றம் தென்படுகிறது.

ஜனாதிபதிப் பதவியைவிட்டு இறங்கிச்செல்ல மனம் ஏவாத நிலையிலேயே அவர் தேர்தல் 2006 ஆம் ஆண்டே நடாத்தப்படவேண்டுமென்றும், தனது பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டே நிறைவு பெறுவதாகவும் ஆரம்பத்தில் கூறிவந்தார்.

எனினும் உயர்நீதிமன்றத் தீர்ப்பு அவருக்குப் பேரிடியாக இறங்கி அவரை நிலைகுலையச் செய்திருக்கிறது.

இதன் தாக்கமும், வீணாகிப்போன அவரின் பதவிக்கால ஏக்கமும் ஒன்றுசேர்ந்து அவரைப் பாடாய்ப்படுத்துவதன் விளைவே அவரில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றம் என்று ஊகிக்கமுடிகிறது.

இந்நிலையில் காலங்காலமாக கட்டிக்காத்த பண்டாரநாயக்க குடும்பத்தின் சொத்தான சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதன் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்வதில், குடும்பத்தை விலக்க வெளியே சிந்திக்கவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டிருப்பதும் ஜனாதிபதியின் போக்கு மாற்றத்திற்கு காரணமாக இருக்கலாம்.

இதன்காரணமாக விரும்பியோ விரும்பாமலோ கட்சியின் கொள்கை என்ற வகையில் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவுசெய்யவேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எனினும் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவுசெய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அடியோடு விருப்பமில்லை என்பது வெளிப்படையான விடயம். ஏனெனில் தங்கள் குடும்பச் சொத்தின் தலைமை கைமாறிச் செல்கிறதே என்ற ஆதங்கம். எனினும் பொதுக் கொள்கை அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ தெரிவாகியிருப்பதுதான் யதார்த்த நிலைமை.

இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இப்பொழுது குத்துவெட்டும், குழிப்பறிப்பும் ஆரம்பமாகிவிட்டது. ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி அபேட்சகர் பதவியிலிருந்து இறக்கவேண்டும் என்ற முனைப்பில் சந்திரிகா குமாரதுங்க காய்நகர்த்தலில் ஈடுபட்டிருக்கிறார் என்பது வெளிப்பட்டிருக்கிறது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் கூட்டணி அமைத்து உடன்படிக்கை செய்து கொண்ட விவகாரம் தற்பொழுது பாரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது. இதனால் மகிந்தவை ஜனாதிபதி அபேட்சகர் பதவியிலிருந்து விலக்கவேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா முடிவுசெய்திருப்பதாகவும், இதன் விளைவு கட்சிக்குள் முரண்பாடுகள் முற்றியிருப்பதாகவும் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இந்த அடிப்படையிலேயே ஜனாதிபதி சந்திரிகா, ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவிற்கு காட்டமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதில் விசித்திரம் என்னவெனில், மகிந்த ராஜபக்ஷ எவ்வாறு ஜே.வி.பியுடன் கூட்டுவைக்கலாம் என்று கேள்வியெழுப்பியிருக்கிறார் சந்திரிகா.

உண்மையில் இனவாதக்கட்சியான ஜே.வி.பியுடன் எவ்வாறு கூட்டுவைக்கலாம் என்பது நியாயமான கேள்விதான். அக்கூட்டு நாட்டுக்கு அபத்தமானதுதான். ஆனால் அதைப்பற்றி ஜனாதிபதி சந்திரிகா கூறுவதற்கு அருகதையில்லை.

ஏனெனில் ஜே.வி.பியுடன் கூட்டுவைக்கலாம் என்ற முறையை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு அறிமுகப்படுத்தி, காட்டிவைத்தவரே சந்திரிகாதான்.

இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவிற்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் இடையே பனிப்போர் ஆரம்பித்திருக்கிறது. பூசல் வலுவடைந்து இருக்கிறது. முடிவு சில நாட்களில் வெடிக்கும். அப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி எவ்வாறு இருக்கும் என்பதை பொறுமையோடு பார்ப்போம்.

# இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேசமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## ஐ.நா செயலாளர் நாயகம் வலியுறுத்து


(வோஷிங்டன்)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச செல்வதற்கு அனைத்துலக சமூகமும் முழு ஒத்துழைப்பையும் வழஙகவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளா நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

நாட்டில சமாதானத்தையும் ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்துவதற்கான சகல சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் சிறப்புத் தூதுவரான லக்தாா பிரஹிமி தனது இலங்கைக்கான 4 நாள் உத்தியோகபூர்வ பயணத்தை நிறைவு செய்ததன் பின்னர் நியூயோர்க்கில் செயலாளர் நாயகத்தை சந்தித்ததன் பின்னர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் குறித்து வெளியிடும் தகவல்கள் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு உறுதியும் வலுவையும் சேர்ப்பதற்கே அன்றி நோர்வேயையோ அல்லது வேறு தரப்பினரையோ அவர்களின் பணியில் இருந்து வெளியேற்றுவதற்காக அல்ல வென செயலாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கையின் சமாதான செயல்பாடுகளில உறுதியான அடித்தளம் ஒன்றை ஏற்படுத்த நோர்வே பாரிய முயற்சியில் இறங்கியுள்ளது. நோர்வேயின் இந்த முயற்சிக்கு ஐக்கிய நாடுகளின முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் எப்பொழுதும் உண்டு எனவும தெரிவிக்கப்பட்டுள்ளது .

டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமைதது நாடுகளான நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது.

அதேவேளை, செயலாளர் நாயகத்தின் விசேட தூதுவர் இலங்கையில் இருந்த பொழுது பல தரப்பினரையும் சந்தித்தபோது நோர்வேயின் செயல்பாடு குறித்து மகிழ்ச்சியையே வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# பேச்சுக்களுக்கான புதிய இடத்தை அரசாங்கம் விரைவில் அறிவிக்கும்

## -நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்கான புதிய இடத்தை அரசு முன்வைக்க உள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தொடக்கத்தில் வெளிநாடு ஒன்றில் பேச்சுக்கள் நடத்தலாம் என்று விடுதலைப்புலிகள் கூறினார்கள்.

அதை அரசு நிராக ரித்த நிலையில் கிளிநொச்சியில் பேச்சுக்களை நடத்தலாம் என்று விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஓமந்தையில் அமைதிப் பேச்சுக்களை நடத்தலாம் என்று அரசுத் தரப்பில் பதிலளிக்கப்பட்டது. ஆனால் கிளிநொச்சி அல்லது வெளிநாட்டில பேச்சுக்களை நடாத்த விடுதலைப் புலிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைதிப் பேச்சுக்களை நடத்தலாம் என்று நோர்வே யோசனை தெரிவித்துள்ளது. ஆனால் இதை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ள நிலையில் புதிய இடம் குறித்து அரசு விரைவில் அறிவிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# அரசு-புலிகள் பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும்

## ஐரோ.ஒன்றிய ஆணையாளர் வலியுறுத்து

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அரசுடன் பேச்சுக்க்ளை ஆரம்பிக்க வேணடுமென்றும் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுள்ளது.

இந்திய ஊடகமொன்றுக்கு பேட்டியளித்தபோது வெளி விவகாரங்களுக்கான ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் பெனிற்றா வால்ட்னர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணம் இருப்பதால் புலிகள் மீதான தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கிறது. இதனை ஐரோப்பிய நாடுகளே தீர்மானிக்க வேண்டுமென்றும அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் விடுதலைப்புலிகளின் உயர்மட்டத்துடன் பேசுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும்,புலிகளுக்கு முக்கியமாக தெரிவிக்கப்பட வேண்டிய பல முக்கிய விடயங்கள உள்ளன.

முதலில் அவர்கள் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரல வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.மேலும் கதிர்காமரின் படுகொலைக்குப்பின் ஐரோப்பிய நாடுகளில் புலிகள் மீது கடும் சட்டதிட்டங்கள் சுமத்தப்பட்டுள்ளதா என கேட்கப்பட்ட வினாவிற்கு, அது உறுப்பு நாடுகள் எடுக்கவேண்டிய தீர்மானம். அனைவரையும் ஒன்றிணைப்பதிலேயே தாம் குறியாகவிருப்பதாக அவர் கூறினார். (ந-6)

# ஜனாதிபதி இன்று அமெ.பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கா செல்லவுள்ளார்.



அவருடன் வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க, அரசியலமைப்பு விவகார அமைச்சர் டியூ குணசேகர மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொணடமான் ஆகியோரும் அமெரிக்கா செல்கின்றனர்.

187 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இந்த வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர். அமெரிக்க செல்லும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு அரசு-புலிகள் நேரடிப் பேச்சுக்களுக்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் என்பன குறித்து வெளிநாட்டுத தலைவர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந)

# இலவசக் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ்-கியூடெக் குழுக்கள் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக நடாத்திவந்த கைபபணிப் பொருட்களின் இறுதி இலவசக்கண்காட்சியும் விற்பனையும் இன்று காலை 10.00மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக சாவகச்சேரி தேசிய சேமிப்புவங்கிக் கிளையின் முகாமையாளர் கந்தையா இராசதுரை, கரித்தாஸ்-கியூடெக் இயக்குநர் வணபிதா கி.ஜோ.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பொதுமக்கள் மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து பயனடைவதோடு இங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சிறு சிறு போட்டிகளிலும் பங்கேற்க முடியும் என்றும் விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ)

# ரஷ்யத் திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30மணிக்கு "லீஷா" என்னும் ரஷ்ய மொழித் திரைப்படம் அகன்ற திரையில் காண்பிக்கப்படவுள்ளது,

இப்படம் தமிழ் உபதலைப்புக்களுடன் காண்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

நன்மை உண்மைக்கு அருகில் இருப்பது. ஆயினும் அது இன்னும் உண்மை நிலையை எய்த விலலை. தீமையால் கலக்கமடையாமல் இருக்க கற்றுக்கொணட பின்னர் நன்மையாலும் மகிழ்ச்சி யடையாமல் இருக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# மதுபோதையில் வந்தவர்களால் மாணவர்கள் தாக்கப்பட்டனர்!

## கன்னாதிட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வந்த சிலர் வீதியால் சென்ற மாணவர்களை கடுமையாகத் தாக்கியதுடன், அவர்களின் சைக்கிள்களையும் அடித்து நொருக்கியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் ஒருமணியளவில் யாழ். பெருமாள் கோயிலடியில் இடம்பெற்றது. சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் வந்த ஆறுபேர் கன்னாதிட்டி வீதியும் மணிக்கூட்டு வீதியும் இணையும் சந்தியில் இறங்கினர்.

அவ்வேளை கன்னாதிட்டி வீதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் அவ் வீதியில் வந்தனர். அவர்களை திடீரெனத் தாக்கிய மதுபோதையினர், அவர்களின் சைக்கிள்களையும் அடித்து நொருக்கி அட்டகாசம் புரிந்தனர். அப்பகுதியில் உள்ள கடை ஒன்றின் முன்னால் நின்ற சைக்கிள்களும் அடித்து நொருக்கப்பட்டன.

இதனையடுத்து அப்பகுதியெங்கும் நேற்று மாலைவரை பதற்றம் நிலவியது. இதேவேளை தாக்குதலுக்குள்ளான மாணவன் ஒருவரின் உறவினர்கள் சிலருக்கும் மதுபோதையில் அட்டகாசம் புரிந்த சிலருக்குமிடையில் மோதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## மகிந்த ராஜபக்ஷ....

பன்னிரண்டு நிபந்தனைகளில் முக்கியமான விடயமானது ஒற்றையாட்சி முறையைப்பற்றியது.

தமிழ்த்தேசிய இனம் ஐம்பது ஆண்டுகாலத்திற்கு முன்னரே ஒற்றையாட்சியை நிராகரித்து சமஷ்டி ஆட்சிமுறையை வலியுறுத்தியது. சந்திரிகா குமாரதுங்க கூட சமஷ்டி முறையை ஏற்றுள்ளார். ஒஸ்லோப் பேச்சுக்களிலும் தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்தான் தமிழர் அபிலாஷைகளை வெளிப்படுத்துகின்ற வகையில் தேர்தலில் பங்கேற்று தனிவேட்பாளரை நிறுத்துவதா? இத் தேர்தலில் தமிழ்மக்கள் பங்குபற்றவேண்டாம் என்பதா? தமிழ்மக்களின் மனச்சாட்சியின்படியான வாக்களிப்புக்கு வேண்டுகோள் விடுப்பதா? என்ற பிரச்சினை தற்போது உள்ளது.

அப்படியான நிலையில் தமிழ் மக்களிடத்தில் இனியும்போய் சிங்களவர் ஏமாற்றிவிட்டார்கள் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு முகங்கொடுக்கமுடியாது.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ கையோங்கி வெற்றிபெற்றால் 2006 ஆம் ஆண்டு யுத்த ஆண்டாக இருக்கும். ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால் அமைதிப் பேச்சுக்கள் நகரக்கூடும். அதற்காக அவரை நாம் முழுமையாக நம்பவில்லை என்றார். (ச-4)

## ஜனாதிபதித்...

அழைப்பின் பின்னரே தங்களது தேர்தல் அறிக்கைகளை வெளியிடவும் தீர்மானித்துள்ளனர். எனினும் தேர்தல் பிரசாரங்கள் தற்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டால் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களின் போது மிகவும் கடுமையான போக்கையே கையாளவேண்டும் என்ற நிபந்தனையுடன் ஜே.வி.பியும்; ஹெலஉறுமயவும் அவருக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நவம்பர் 16 இற்கும் 21 இற்கும் இடையில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற)

## தமிழ்....

படையினர் அதிலிருந்த பயணிகள் அனைவரையும் இறக்கி சோதனை செய்ததுடன் அதில் பயணம் செய்த 22 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் கண்கள் மற்றும் கைகளை கட்டி கைது செய்துள்ளனர். (ச-8)

## முல்லைத்தீவில் மனித எலும்புக்கூடு

முல்லைத்தீவு வட்டுவாகல் கடற்கரை வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மனித எலும்புக்கூடு ஒன்று முல்லைத்தீவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வட்டுவாகல் கடற்கரையில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் கொடுத்த முறைப்பாட்டினை அடுத்து இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்டது. (ச-4)

## முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுவிழா

வடக்குக்கிழக்கு மாகாண முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலைய வழிகாட்டலில் நடாத்தப்படும் காரைநகர் பிரதேச கிழக்குக் குடும்பம் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுவிழா இன்று காலை 9.30 மணிக்கு யாழ். கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் ஏ.கணேசானந்தராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், காரைநகர் யாழ். கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலய அதிபர் கா.குமாரவேலு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (ச)

## விடுதலைப்...

சர்வதேச சமூகம் ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும்.

அனுசரணைப் பணியிலிருந்து நோர்வையை மாற்றிவிடுவதால் இனப்பிரச்சினையின் தன்மை மாறிவிடப்போவதில்லை. இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் பாரிய அரசியல் மாற்றங்கள் உருவாகவேண்டும். தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் மூலம் அமைதி முயற்சிக்கான வாய்ப்புக்களை தூர எறிந்துவிடக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## பொங்குதமிழ் எழுச்சிக்குழுக்கள்

(யாழ்ப்பாணம்)

வலி. தென்மேற்கில் பொங்கு தமிழ் எழுச்சிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன

கடந்த வார இறுதியில் மானிப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர் ஆகிய இடங்களில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வலி. தென்மேற்கில் கடற்றொழில் சம்மேளனங்களின் சமாசம், பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கம் மற்றும் வலி. தென்மேற்கு பிரதேச செயலகம் ஆகியவற்றிலும், காரைநகரில் வர்த்தகர் சங்கம், மாதர்சங்கம், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், வட பிராந்திய போக்குவரத்துச்சபை ஆகியவற்றிலும்,

சங்கானையில் பிரதேச செயலகத்திலும், கிராம உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் நிலையங்களிலும் பொங்கு தமிழ் எழுச்சிக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. (த.9)

# துணைப்படைப் பயிற்சியில் பருத்தித்துறை மக்கள்

(வடமராட்சி)

வடமராட்சி பருத்தித்துறை முனைப்பகுதி மக்கள் தமிழீழ கடற்படையின் துணைப்படைப் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

இப்பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்வு வடமராட்சி கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தமிழீழ கடற்படையின் விசேட தளபதி கேணல் சூசை உட்பட பல முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் முதல் முறையாக இப் பயிற்சியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச.4)

# 'விடுதலைப் பேரொளி' நூல் செப்.18இல் பிரான்ஸில் வெளியீடு

தமிழீழ தேசியத் தலைவர் குறித்த 'விடுதலைப் பேரொளி' நூல் வெளியிட்டுவிழா பிரான்ஸில் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேசியத் தலைவரின் அரிதான ஒளிப்படங்கள், களநிலைப்படங்கள் தாங்கி 296 பக்கங்களுடன் முழுமையான வண்ண வடிவமைப்பில் பிரான்ஸ் ஈழமுரசு இந்நூலை உருவாக்கி வெளியிடுகிறது.

தமிழீழ தேசியத் தலைவரின் வாழ்வியல் குறிப்புக்கள், சாதனைகள், எதிர்கொண்ட சோதனைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தி நிற்கும் இந்த வரலாற்று ஆவணக் குறிப்பு நூலாக இது உருவாக்கப்பட்டுள்ளது. (ச)

## பொலிஸ்...

மோட்டார் சைக்கிளிலில வந்த சிலரே கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

## தேசிய அரசை அமைக்க....

ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆனால் ஊடகங்களில் அனைத்து நேரங்களிலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். இருபிரதான கட்சிகளும் ஒருங்கிணைந்து செயற்பட்டால்தான் யுத்தத்தை முடிவுக் கொண்டுவரவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவும்முடியும்.

யுத்தநிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அமைதிப் பேச்சுக்கள் வெளிநாட்டில் நடைபெறாது. அதை நாம் நிராகரிக்கிறோம்.

நாம் அனைவரும் இலங்கையர்களே. ஏன் இலங்கையிலேயே இப் பேச்சுக்களை நடத்தக்கூடாது? இது தொடர்பில் விரைவில் சுமுகத் தீர்வுஏற்படும் என்று நம்புகின்றேன்.

ஜே.வி.பியுடனான ஒப்பந்தம் குறித்து எனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக அரைமணிநேரம் இதுகுறித்து மகிந்த ராஜபக்ஷ என்னிடம் பேசினார்.

ஆனால் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் இவ் ஒப்பந்தம் குறித்து மகிந்த என்னிடம் இப்படித் தெரிவித்தது முறையற்றது.

ஜே.வி.பியுடன் மகிந்த ராஜபக்ஷ அவராகவே தனிப்பட்ட முறையில் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பிறகு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நிகழ்விற்கு தங்களை மகிந்த ராஜபக்ஷ அழைத்திருப்பதாக பல சுதந்திரக்கட்சித் தலைவர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு தெரிவித்தனர்.

எனக்கு அது குறித்து எதுவும் தெரியாது. அந்த நிகழ்சிக்குப் போவது உங்களின் தனிப்பட்ட முடிவுவென்று கூறிவிட்டேன்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வியாழன்று மகிந்த ராஜபக்ஷவை தேர்தல் அறிக்கை குறித்து விவாதிக்க தொலைபேசியில் அழைத்தேன்.

தேர்தல் அறிக்கை ஞாயிற்றுக்கிழமை அளவில் இறுதிசெய்யப்பட்ட பிறகே பிற கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று அவரிடம் கூறினேன்.

சில நாட்களுக்கு முன்னதாக நடைபெற்ற கட்சியின் ஆண்டு மாநாட்டின்போது மகிந்த ராஜபக்ஷவுடன் இதுதொடர்பில் நீண்டநேரம் பேசினேன்.

ஆனால் இந்த ஒப்பந்தம் குறித்து எதையும் என்னிடம் மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கவில்லை. அதேபோல் ஜாதிக ஹெலஉறுமயவுடனான ஒப்பந்தத்தையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைவகுக்கும் மத்தியகுழு அங்கீகரித்துவிடவில்லை.

கட்சியின் தேர்தல் அறிக்கை குழுவிற்கு நான் தலைவராகத்தான் இன்னமும் இருக்கிறேன். எங்கள் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் எந்தவித மாற்றமும் இல்லாமலேயே தேர்தல் அறிக்கை இருக்கும்.

நோர்வேயை வெளியேற்றிவிட்டு ஐ.நா. சபையை இனப்பிரச்சினையில் தலையிடவைப்பது என்ற ஊகங்களுக்கு இடமில்லை. நோர்வேயின் அனுசரணையாளர் பணி மிகச் சிறப்பானது.

குறிப்பாக ஆழிப்பேரலை மீளமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்கியதில் நோர்வேயின் பங்குபாராட்டுதற்குரியது என ஜனாதிபதி தெரிவித்தார். (ச-4)

A/L - 2006
DAY CLASS
(வர்த்தகப்பிரிவு)
12.09.05 முதல்
காலை 8.30
கணக்கீடு-D.Sam
வணிகக்கல்வி-பசில்
பொருளியல்-உதயன்
(C-1640)
DMI Jaffna

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இன்று முதல் அஜித், ஜோதிகா, வடிவேல் நடித்த


கா.நே: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ்,நமீதா,வடிவேல் நடிப்பில்
இங்கிலிஷ்காரன்
கா.நே: 11.00,2.45,6.00 (பு.நே)

மனோகரா யாழ்.
புதிய வெளியீடு
09.09.2005 முதல்
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
கா.நேரம்: 10.30;2.30;6.30;9.30

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உளளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.